www.padippakam.com

# கறுப்புத்தாலி

## ராஜா

வெளியீடு

சிந்துநதி பதிப்பகம்



படிப்பகம்

www.padippakam.com




MAHARANI

# மகாராணி

உங்களுக்கு இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களை மலிவான விலையில் விற்பனை செய்ய காத்திருக்கின்றார்கள் புதிய நிர்வாக அமைப்பை கொண்ட மகாராணி நிர்வாகத்தினர்.

MAHARANI
DUSSELDORFER Str 13
6000 FRANKFURT/ MAIN

([illegible] அருகில்)

Tel: 069- 234776


படிப்பகம்

www.padippakam.com

# கறுப்புத்தாலி

## ராஜா

வெளியீடு
சிந்துநதி பதிப்பகம்
ஜேர்மனி.

படிப்பகம்

www.padippakam.com

* " கறுப்புத்தாலி " ராஜா
* (C) உரிமை : நூலாசிரியருக்கு
* முதற்பதிப்பு : வைகாசி (1993)
* வெளியீடு, அச்சுப்பதிப்பு : சிந்துநதி பதிப்பகம்
* வடிவமைப்பு, ஓவியங்கள் : சேகர்

* " KARUPPTHTHAALE "
* (C) RAJA
* FIRST EDITION : MAY (1993)
* PUBLISHED BY : SINTHUNATHY (SEGAR ARTS)
PFINGSTBRUNNEN STR, 31
6000 FRANKFURT, 90
GERMANY.
TEL:069-704439

* PRINTED BY : SINTHUNATHY
* ART BT : SEGAR ARTS

( இப்பதிப்பில் சில ஆக்கங்கள் இந்திய வார, மாத சஞ்சிகைகளில் இருந்து பிரசுரமாக்கப்பட்டுள்ளது. அவைகளுக்கு எமது நன்றிகள். )

சிந்துநதி பதிப்பகம்.

படிப்பகம்

www.padippakam.com

எம்மண்ணின்
விடிவுக்காய்
தம்முயிரை
அர்ப்பணித்த
தியாகிகளுக்கு
இந்நூல்
சமர்ப்பணமாகிறது.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துகின்றோம்.

நாம் பிறந்து வளர்ந்த அந்த புண்ணிய பூமி இன்று அந்த அண்ணியனின் அரக்கத்தனத்தினால் மங்கலம் இழந்து இயற்கைஎழில் கெட்டு நிம்மதி இன்றித்தவிக்கிறது.

அந்தக்கடல் அலைகள் கொஞ்சும் எம்தாயகம் கண்ணீர் வெள்ளத்தால் சேறாகிறது. நினைத்தாலே இனிக்கும் எங்கள் மண்ணில் நினைத்தும் பார்க்க முடியாத கொடுமைகள் நிகழ்கின்றன.

தப்பி ஓடிவந்த எமக்கு எம் உடன்பிறப்புகள் அங்கு என்னென்ன அல்லல்களைச் சந்திக்கிறார்கள் என்று எண்ணிப்பார்க்க கூடநேரமில்லாமல் ஏதேதோ வேலைகள் அர்த்தமில்லாத தேவைகள்.

இந்த நிலையில் எம் நினைவுகளை மீண்டும் தாயக நினைவுகளில் சிந்திக்க வைக்கவும் எம் உடன்பிறப்புகள் இராணுவத்திடம் சிக்கி அனுபவிக்கும் இன்னல்களை எடுத்தியம்பத்தக்கவகையிலும் திரு. ராஜா அவர்கள் எழுதிய கறுப்புத்தாலி கதை அமைந்துள்ளது. இது பிராங்பேர்ட் தமிழ்மன்ற வெளியீடான தமிழ்நாதம் சஞ்சிகையில் தொடர் நவீனமாக வந்து எம் உள்ளத்தை தொட்டிழுத்த நல்லதொரு நவீனமாகும். இதனை எழுதி எங்களை தாயக நினைவுகளில் சஞ்சரிக்க வைத்ததுடன் சிந்திக்கவும் தூண்டிய திரு. ராஜா அவர்கள் இதுபோன்று இன்னும் பல நல்ல கதைகளை எங்கள் தமிழ் இனத்திற்கு தந்து சிறந்த எழுத்தாழனாக திகழ வாழ்த்துவதுடன் இக்கதையை நூல்வடிவில் தந்து எல்லோரும் படித்து மகிழவைக்க முன்வந்த சிந்துநதி பதிப்பகத்திற்கும் சேகர் ஆட்ஸ் நிறுவனத்திற்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வண்ணத்துப்பூச்சி

**வி. நாகலிங்கம் (காசி)**



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துகின்றோம்.

தமிழீழத்தின் இன்றைய அவல நிலைதன்னையும், அவற்றிற்குத் தீர்வ காணத்துடிக்கும் எமது இளம் சமுதாயத்தையும் அப்படியே படம் பிடித்துக்காட்டியிருக்கிறார் கதாசிரியர் ராஜா அவர்கள். எமது தாய்நாடு நாம் பிறந்தநாடு நாம் வளர்ந்த அந்த மண் இன்று புயலடித் துத் ஓய்ந்தது போல் அலங்கோலமாய்க் காட்சியளிக்கிறது. பசிக்கு உணவின்றி உடுக்க உணவின்றி உறங்க இடமின்றித் தவிக்கின்றார்கள் எமது உடன்பிறப்புகள் அங்கே.

தஞ்சம் என்று கூறி நாடு விட்டு வெளிநாடு வந்த எமக்கு எம் நாட்டின், நாம் பிறந்த அந்த அந்தப்புனிதமான மண் ணின் இன்றைய நிலை ஏனோ புரியவில்லை. இல்லை எங்கள் நாட்டையே நினைக்க மறந்து விட்டிருந்தது எங்கள் மனம்.

ஆனால் நாம் இன்னமும் மறக்கவில்லை உங்களையும் சிந்திக்க தூண்டி விடுகின்றே பார் என்று கங்கணங்கட்டிக்கொண்டு உண்மை நிகழ்ச்சிகளைக் கற்பனையில் தோய்த்தெடுத்து அழகூட்டி, மெருகூட்டி கதைவடிவம் கொடுத்திருக்கின்றார் இங்கே.

தமிழ்நாதம் சஞ்சிகையில் தொடர் கதையாக வந்த இக்கதையை இன்று நூலுருவில் மேலும் பல விடயங்களையும் உள்ளடக்கி ஓவியர் சேகர் கைவண்ணத்தில் இன்னும் மெருகேறி ஒளிர்விடுவது பாராட்டக்கூடிய ஒன்று.

இந்தக்கதையை எழுதி எல்லோர் மத்தியிலும் எமது நாட்டின் நிலைதனைச் சிந்திக்கத்தூண்டிய ஆசிரியர் திரு. ராஜா அவர்களையும், பல சிரமங்களுக்கு மத்தியிலும் இந்தத்தொடர்ச தையை நூல் வடிவில் தொகுத்து வெளியிடும் சிந்துநதி பதிப்பகம் சேகர் அவர்களையும் பாராட்டி மேலும் மேலும் இப்படியான சிறந்த ஆக்கங்களை வெளியிட வேண்டும் எனக்கூறி எனது நல்வாழ்த்துச் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. யசோதரன்

தமிழ்நாதம் ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

**1990**ஆம் ஆண்டு நான் தமிழீழத்திற்குச் சென்ற போது தமிழீழம் இலங்கை, இந்திய அரசுகளிடம் சிக்குண்டு சின்னா பின்னாமாக்கப்பட்டிருந்த கோரக் காட்சியை கண்ணுற்றேன். இந்திய இராணுவம் தமிழீழத்தில் சூறையாடுவதற்கு ஒன்றுமே இல்லை என்ற நிலையில் தம் உயிரை பாதுகாப்பதற்கு நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தார்கள்.

சில கிராமங்கள் சூறாவளி அடித்து ஓய்ந்தது போல வெறிச்சோடிக் கிடந்தன. இந்த நிலையிலும் எம்மவர் கலங்காமல் சளைக்காமல் உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்ற நிலையில் ஈழத்தமிழர் தலைநிமிர்ந்து நின்றனர். இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் பலதரப்பட்ட மக்களுடன் அளவழாவிய பின் உதித்த கதையே கறுப்புத் தாலி என வடிவமெடுத்தது.

நான் ஒரு எழுத்தாளனாக இல்லாத போதிலும் எம்மவர்க்கு ஏற்பட்ட இன்னல்களைக் கேள்வியுற்ற பின் என்மனதில் உதித்த கற்பனையே இது.

இக்கதையை எழுதிட ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த திரு. பத்மா அவர்களுக்கும் கொம்பியூட்டர் மூலம் அச்செழுத்துக்களாக்கிய திரு. விக்ரமன் அவர்களுக்கும், திருமதி. சகி அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலுக்கு மெருகூட்டும் விதத்தில் பல ஓவியங்களை வரைந்து PRINT செய்து புத்தக வடிவம் கொடுத்த பெருமை ஓவியர் சேகரையும் அவரது சிந்துநதி பதிப்பகத்தையும் சாரும். திரு. சேகர் அவர்கள் எந்தவித பண உதவியையும் எதிர்பாராது சிந்துநதி பதிப்பகத்தினால் இந்நூலை வெளியிட்டமையை பாராட்டாமல் இருக்க முடியாது. மற்றும் இந்நூலுக்கு விளம்பரங்கள் தந்துதவிய வியாபார நிறுவனங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இம்மலருக்கு கிடைக்கும் அன்பளிப்புகள் யாவும் தமிழ் ஈழத்தில் வாழ்விழந்தோருக்கும். தாய், தந்தையற்ற குழந்தைகளுக்கும் கொடுக்கப்படும். (இக்கதை 1992ஆம் ஆண்டு தமிழ் நாதம் இதழில் தொடர்கதையாக பிரசுரிக்கப்பட்டது.)



P. ராஜா.

பிராங்பேர்ட்.


படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



# கறுப்புத்தாலி

பச்சைப்பசேலெனப் பூத்துக்குலுங்கும் பூஞ்சோலையை மேலும் மெருகூட்டுவது போல மல்லிகாதேவியும் துளசியம்மாளும் பூங்சோலைக்குட் புகுந்தனர். கோவிற் பூசைக்காகத் தமது தந்தையாருக்குத் தேவையான பூக்களைத் தமது பூக்கரங்களால் கொய்தனர். இப்பணி அவர்களது தினசரிக் கடைமைகளில் ஒன்றாக விளங்கியது. நடுத்தரவகுப்புப் பிராமண குலத்தில் பிறந்த இவர்கள் மிகவும் பண்பும் ஆசாரமுமாக வளர்ந்தார்கள். வயது 20, 21 கொண்ட இவர்கள் பூப்பறிப்பதை எதிர் வீட்டில் வசிக்கும் கோபால் மிகவும் கூர்மையாக யன்னல் ஓரமாக இருந்து கொண்டு ''ஆகா என்ன அழகு! தேவலோகக்கன்னிகைகளா இவர்கள்?'' இப்படியாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பது தவறென்றாலும் அவனது உணர்ச்சிகள் அவனது கட்டுபாட்டெல்லைகளை மீறிக் கொண்டு விட்டன.

அன்றொரு நாள் வழமைபோல் யன்னல் அருகில் வந்து ஒதுங்கி நின்று அத்தேவதை களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு நின்ற சமயம் திடீரெனக் கேட்ட பூந்தோட்டக் கதவின் ''கிறீச்'' என்ற சத்தத்தைத் தொடர்ந்து அக்கன்னிகைகளது வருகை அவன் கண்ணில் பட்டது. இது இவ்வண்ணமிருக்க, பேரிரைச்சல் போட்டுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு வந்த இராணுவ வண்டி அந்தச் சூழ்நிலையின் அமைதியைக் கெடுத்த வண்ணம் அவ்விடத்திற்கு வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இராணுவத்தினர் வண்டியிலிருந்து குதித்து நாலா பக்கமும் சிதறி ஓடினர். அந்தச் சுற்றாடலில் உள்ள ஒவ்வொரு வீட்டையும் சோதனையிட்டனர். இறுதியாக நாராயணசர்மாவின் வீட்டை அணுகிய அவர்கள் வெளிவாசற் கதவைப் பலமாகத் தட்டினர். இதையெல்லாம் யன்னல் ஓரமாக இருந்து அவதானித்த கோபால் அவ்விரு பெண்களுக்கும் மெதுவாகச் சைகை காட்டி ''இராணுவத்தினர் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டுகின்றனர் கவனமாக எங்காவது பற்றை மறைவில் ஒளித்திருங்கள்'' என்று கூறினான். இப்பெண்களது தாயாரும் தோட்டப்பக்கமாக ஓடி வந்து இவர்களை எங்காவது மறைந்திருக்கும்படி கூறி மீண்டும் வீட்டிற்குள் நுழைந்தாள்.

அச்சமயம் இரணுவத்தினர் நாராயணசர்மாவை பலமாகப் பிடித்தவண்ணம் துப்பாக்கியை அவரின் நெற்றியில் வைத்து ''சொல், எங்கே உன் பிள்ளைகள்? நீ சொல்லா விட்டால் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுவோம்'' என்று பயமுறுத்தினர். அந்நேரம் மல்லிகாவும், துளசியும் ஓடி வந்து ''அப்பாவைக் கொல்லாதீர்கள்; அவரை விட்டுவிடுங்கள்'' என்று மிகவும் பணிவுடன் மன்றாட்டமாக வேண்டினார்கள். அந்த இரு இளம்பெண்களையும் கண்ட இராணுவதிகாரி தன்னை மறந்து சர்மாவை கைவிட்டு, அவ்விருவரையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். முரட்டுத் தன்மை கொண்ட மற்றைய சிப்பாய்களும் காம மேலீட்டினால் அசடு வழிய அவ்விருவரையும் ஏற இறங்கப் பார்த்த வண்ணம் ''இவர்களைத்தான் நாம் தேடுகின்றோம். இவர்கள் பயங்கரவாதிகள் என்ற தகவல் கிடைத்துள்ளது'' என்று கூற, ''இவர்களைக் கைது செய்து முகாமிற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று அதிகாரத் தொனியில் இராணுவ அதிகாரி கூறினான். இதக்கேட்ட இரு பிஞ்சு உள்ளங்களும் ஏங்கி நின்றன. ஓர் முரடன் அவர்களைக் கைது செய்து இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றினான். அப்போது ''என்னையும் கைது செய்யுங்கள், நானும் வருகிறேன்'' என்று ஓலமிட்டபடி சர்மா அவர்களைப் பின் தொடரவும் இராணுவ அதிகாரி அவரின் முகத்தில் தனது ''பூட்ஸ்'' காலால் எட்டி உதைத்தார். அவர் முகம் படுகாயமடைந்து, சிதைந்தும் கண்டல் காயமும் கொண்டு மயங்கித் தெருவில் விழுந்தார். இவற்றையெல்லாம் யன்னல் ஓரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த போதும், உதவி செய்வதற்கோ அன்றேல் கிட்ட நெருங்குவதற்கோ தனக்கு ஒருவித சந்தர்ப்பமும் வாய்க்காதென்பதை கோபால் நன்றாக உணர்ந்திருந்தான்.

இராணுவ முரடர்கள் மறைந்ததும் கோபால் வெளியே வந்து மயக்க நிலையில் தெருவில் அலங்கோலமாகக் கிடந்த அந்த அப்பாவியான



படிப்பகம்

www.padippakam.com

சர்மாவைத் தூக்கிக் கொண்டு அவரது வீட்டை அடைந்தான். அயலவர்கள் வீட்டுக்குள் வந்து சர்மாவின் காயங்களுக்கு முதலுதவி அளித்து, சர்மாவின் மனைவியின் மூர்ச்சையைத் தெளிவுபடுத்தினர். அவர்களுள் ஒரு சிலர் சர்மாவின் பிள்ளைகளைப் பற்றி அனுதாபம் மட்டுமன்றி, தேவையற்ற விமர்சனமும் கூற முற்பட்டனர். இது கோபாலின் நெஞ்சை ஈட்டியால் தாக்குவது போன்றிருந்தது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற இச்செய்கைகளை அவனால் தாங்க முடியவில்லை. உடனே வெளியே சென்று ''இராணுவம் வருகிறது! இராணுவம் வருகிறது!'' என்று உரக்கக் கத்தினான். இதைக்கேட்ட யாவரும் திக்குத் தெரியாத வண்ணம் ஓடி மறைந்தனர்.

அதன் பின்னர் கோபால் இருவருக்கும் தேனீர் கொடுத்து ஆறுதல் வார்த்தைகள் சொல்லி ''நீங்கள் கவலைப்பட வேண்டாம். பிள்ளைகள் இருக்குமிடம் எனக்குத் தெரியும்; நான் உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன். சற்றுப் பொறுமையாக் இருங்கள்'' என்று அவர்களைத் தேற்றினான். இராணுவ முகாம் எங்கே இருக்கின்றதென்பதைக் கூடத் தெரியாத கோபால், தான் சொன்னது பொய் என்பதை உணர்ந்த போதிலும், ''ஆபத்திற்குப் பாவமில்லை'' எனத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

காலை போய் மாலையாகியும் தன் பிள்ளைகள் வீடு திரும்பவில்லையே என்று மனம் வேதனைப்பட்ட வண்ணம் சர்மா கோபாலின் வீட்டுக் கதவைத் தட்டினார். ஐயர் வருவதை ஏற்கனவே உணர்ந்த கோபால், தான் வீட்டில் இல்லாதது போலப் பாசாங்கு செய்து கதவைத் திறக்காமலே வீடிற்குள் இருந்துவிட்டான். ஐயர் சென்று பத்து நிமிடங்களின் பின், நீண்ட தூரம் சென்று களைத்து வருவன் போல் ஐயரின் வீட்டிற்குள் நுழைந்தான். ஐயரும் அவனை எதிர்பார்த்த வண்ணம் ''தம்பி! அந்த இராணுவ முகாம் தெரியுமென்றாயே! வா போகலாம்'' என்றார். ஒரு பொய்யை



## காந்தி சிலை

மகாத்மாவே!
உன் தலை மேல் அமர்ந்து
எச்சமிடும் காக்கையை
விரட்டவாவது
உன்னுடைய கைத்தடி உயரக் கூடாதா?
ஓ...
அஹிம்சை தடுக்கிறதோ?!

வசீம் ஜாவித்.



படிப்பகம்

www.padippakam.com

மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டிவரும் என்பதை உணர்ந்த கோபால், ''ஐயா, முன்பிருந்த இடத்தில் இப்போது அந்த முகாம் இல்லை. அதை எங்கோ மாற்றி விட்டார்கள். போஸ்ட்மன் குமாரசாமி அண்ணைதான் இதற்குச் சரியான ஆள். அவர்தான் எல்லோரையும் சுகச் செய்தி விசாரித்து இதைக் கண்டு பிடிக்க கூடியவர். அவரை நான் சந்தித்து அதற்குப் பின் உங்களுக்கு நான் அறிவிக்கிறேன்'' என்று கூறவும் ''எப்போது இது பற்றிய தகவல் எனக்குக் கிடைக்கும்?'' என ஆவலோடு ஐயர் வினாவினார். ''நாளை காலை பத்து மணிக்கெல்லாம் குமாரசாமியண்ணை முகாமிற்குச் சென்று விசாரித்துவிட்டு வந்து சொல்லுவார்'' என்று கோபால் கூறவும், ஐயர் துடிதுடித்து எழுந்து ''ஐயோ! என் குஞ்சுகளை அந்த வெறி பிடித்த மிருகங்கள் வாழுமிடத்தில் இரவு தங்க விடுவதா? நான் செத்தாலும் பரவாயில்லை, இப்பவே போஸ்ட்மன் குமாரசாமியை சந்தித்து உடனே முகாமிற்குச் செல்லப் போகிறேன்'' என்று கூறி ஐயர் ஓட ஆரம்பித்தார். கோபால் எவ்வளவோ கஷ்டப்பட்டு அவரைப் பிடித்து ''ஐயா இப்போ ஆறு மணி ஊரடங்குச் சட்ட நேரம்; வெளியில் போனால் உயிருக்கு ஆபத்து. அது மட்டுமல்ல இந்த நெரம் உங்கள் பிள்ளைகளைக் கூட்டி வந்தால் அவர்களுக்கும் ஆபத்து'' என்று கூறவும், ஐயர் சற்றுத் தெளிந்தார். கோபால் ஒருவாறு இருவரையும் சாப்பிடச் செய்து விட்டு காலை வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றுவிட்டான்.

மல்லிகாதேவியும் துளசியம்மாளும் தங்களுக்கு இப்படி திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியையும் சித்திரவதையையும் தாங்க முடியாமல் கத்திக் குளறி மேற்கொண்டு கத்த முடியாமல் இளைத்துப் போயிருந்தனர். தந்தை இராணுவத்தினரின் ''பூட்ஸ்'' உதைக்குப் பலியாகி துடிதுடித்து விழுந்த அக்கொடூரமான காட்சி இன்னும் அவர்கல் கண்களை விட்டு அகலவில்லை. அம்மாவின் நிலை எப்படியோ? என்று ஏங்கிக் கொண்டிருந்த நிலையில் அவர்கள் தங்களையே மறந்திருந்தார்கள்.

நீண்ட தூரம் சென்ற பின் ஓர் இடத்தில் வண்டி நிறுத்தப்பட்டு இவ்விருவரும் வண்டியிலிருந்து இறக்கப்படுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இராணுவத்தினர் ஒருவரையொருவர் முந்திக்கொண்டும் போட்டிபோட்டுக்கொண்டும் அவர்களது கைகளைப் பிடித்து இறக்க முற்பட்டார்கள். ''இவள் மிகவும் பலவீனமாக இருக்கிறாள்'' என்று ஒருவன் துளசியம்மாவைத் தூக்க முயன்றான். அவள் திமிறினாள்; கத்தினாள். இறுதியில் தன்னை விடும்படி கெஞ்சிக் கேட்டாள். அந்த மிருகத்தின் பிடியிலிருந்து தப்ப அவளால் முடியவில்லை. ஏனைய இராணுவச் சிப்பாய்கள் கை கொட்டுவதும், சிரிப்பதுமாகக் காணப்பட்டனர்.

மல்லிகாவை அந்த இராணுவ அதிகாரி மிகவும் மரியாதையாக அழைத்துச் சென்றார். அவர் சற்று வயதானவர். ஐம்பது வயது



படிப்பகம்

www.padippakam.com

மதிக்கத்தக்கவர். அவர் மல்லிகாவை நோக்கி ''உன் வயதில் எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். நீ ஒன்றுக்கும் பயப்படாதே என்று கூறி காரியாலயத்தை நோக்கி அவர்களைக் கூட்டிச் சென்றார். உள்ளே சென்றதும் அந்த இராணுவச் சிப்பாய் துளசியைத் தொடுவதும் அவள் எரிச்சலுடன் அவனது கையைத் தட்டி விடுவதுமாகக் காணப்பட்டாள். முகத்தில் அவளுக்கு வாழ்க்கையில் விரக்தி போன்ற ஒரு அறிகுறி தென்பட்டது. இப்போதுதான் அவர்கள் இருவரும் தங்களைப் பற்றிச் சிந்திக்க முற்பட்டனர். இந்தக் கொடியவர்கள் மேலும் என்னென்ன கொடுமைகளைத் தங்களுக்கு இழைக்க போகிறார்களோ என்ற பயமும் வெட்கமும் இவர்கள் மனதில் குடி கொண்டிருந்தது. காலையில் இருந்து சாப்பிடாமல் இருக்கும் இவர்களைச் சாப்பிடும்படி அந்த இராணுவ அதிகாரி கூறினார். மாமிசத்தையே கண்ணாற் கூடக் காணாத அவர்களுக்கு கோழியிறைச்சியும் றொட்டியும் சப்பிடுவதற்காகக் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் அவர்களுக்குச் சாப்பிட மனம் வருமா? இருவரும் ஒரு அறைக்குள் அனுமதிக்கப்பட்டார்கள். அந்த அறையில் ஒரு கட்டில் மட்டுமே போடப்பட்டிருந்தது. கட்டிலில் போடப்பட்டிருந்த படுக்கை விரிப்பில் ஆங்காங்கே இரத்தக் கறைகள் படிந்திருந்தன. இவற்றையெல்லாம் பார்த்த இருவரும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு தேம்பித்தேம்பி அழுதனர். மல்லிகா தன் சகோதரி துளசியைப் பார்த்து ''நீ பயப்படாதே. அந்த அதிகாரி நல்லவர். அவர் எங்களைப் பாதுகாப்பாக வீட்டுக்கு அனுப்பி வைப்பார்'' என்று கூறவும், துளசி ஆவேசம் கொண்டு ''அக்கா! உனக்கு மனிதரைப் புரியும் சக்தி மிகக் குறைவு. அவனுக்கு அதிகாரமும் நல்ல எண்ணமும் இருந்திருந்தால் மற்றவன் என்னைத் தூக்கிய போதோ அன்றேல் சேட்டைகள் செய்யும் போதோ சித்திரவதைகள் செய்யும் போதோ ஒன்றுமே புரியாதவன் போல நடித்தானே! இவனா நல்லவன்? இவர்களெல்லாம் ஒரு குலைத் தேங்கய்கள்'' என்று கூறிக் கொண்டு எதையோ கண்டது போல் அங்கு தென்பட்ட ஒரு சிறிய யன்னலை உற்று நோக்கினாள்.

### தெரிந்த கணக்கு

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் இந் நான்கில் கழித்தலுக்கு மட்டும் உள்ள தனித் தன்மை என்ன தெரியுமா?

நமக்கு..
தட்டிக் கூட்டத் தெரியாது;
தட்டிப் பெருக்கத் தெரியாது;
தட்டி வகுக்கத் தெரியாது;

ஆனால், எதையும்
தட்டிக் கழிக்கத் தெரியும்.



— யாரோ



படிப்பகம்

www.padippakam.com



இருட்டோடு இருட்டாக இருகண்கள் இவர்களை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தன. ''அக்கா அந்த யன்னலைப்பார்! யாரோ எங்களைப் பார்த்தவண்ணம் இருக்கின்றார்கள்!! ஆணோ, பெண்ணோ என்று கூடத்தெரியவில்லை.'' என்று தங்கை கூறவும் இருவரும் அமைதியாக அக்கண்களை நோக்கினர். யாரோ தாங்கள் இருக்கும் அறைப்பக்கம் வருவதை உணர்ந்தனர். அறைக்கதவு திறக்கப்பட்டு இரு உருவங்கள் உள்ளே நுழைந்தன. அந்த வயதுபோன அதிகாரியும் துளசியைத்தூக்கிய அதிகாரியுமே அவர்கள். ஏதோ ஏல விற்பனைக்கு விடப்பட்ட மாடுகளைப் பார்ப்பது போல பார்த்துவிட்டு அந்த அதிகாரி துளசியைச் சுட்டிக் காட்டினான். வயதுபோன அதிகாரி அந்த முரடனுக்கு புத்தி கூறுவது போல ''முரட்டுத்தனமாக நடக்காது மிகவும் தன்மையாக நடந்துகொள்ள வேண்டும்'' என்று சற்று இலகுவாகச் சொன்னான். பின்னர் துள்சியைப் பார்த்து ''நீ இந்தக் கொமாண்டருடன் செல். அவர் உன்னிடத்தில் சில கேள்விகள் கேட்பார். அத்துடன் அவர் சொல்வதை நீ கேட்டுப் பணிந்து போனால் அவர் நாளைக் காலைக்கே உன்னை உன் வீட்டுக்கு அனுப்பி வைப்பார்''என்றான். இதைக்கேட்ட இருவரும் பதறினர். ''நாங்கள் ஒன்றாகவே



படிப்பகம்

www.padippakam.com

இருப்போம். எங்களைப் பிரிக்காமல் கேட்கும் கேள்விகளை இப்போதே கேளுங்கள் கேட்டுவிட்டு உடனேயே எங்களை அனுப்புங்கள்'' என்று ஆவேசமாகக் கூறினர். பின்பு அந்த அழகு தேவதைகள் அந்தக் கொடியவர்களின் காலில் விழுந்து மன்றாடினார்கள். ''தயவு செய்து எங்களை மட்டும் பிரித்து விடாதீர்கள். நீங்கள் சொல்கின்றபடி கேட்கின்றோம். எங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.'' என்று மன்றாடக் கூடிய சொற்கள் யாவற்றையும் பயன்படுத்தி கெஞ்சினர், அழுதனர், ஓலமிட்டனர். முடிவு அந்தப் பாதகன் எதற்குமே செவி சாய்க்காது துளசியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். மல்லிகா தன் தங்கையை விடும்படி கத்தியவண்ணம் துளசியைக் கட்டிப்பிடித்துக்கொண்டாள். அந்த முரடன் மல்லிகாவின் கூந்தலைப்பிடித்து அவளை உதறித்தள்ளிவிட்டு துளசியைத் தன் வாகனத்தில் ஏற்றி அவ்விடமிருந்து அகன்றான். மல்லிகா சுவருடன் மோதுண்டு காயங்களுடனும், இரத்தத்துளிகளிடனும் தரையில் மயங்கிக் கிடந்தாள். வயதான அதிகாரி அவளுக்கு முதற்சிகிற்சை அளிக்கும் முகமாக முகத்தில் நீரைத் தெளித்துவிட்டு இராப்போசனத்திற்குச் சென்றார். சுயநிலையடைந்த மல்லிகா தன்னருகில் இருந்த தங்கையைக் காணவில்லையே என்று துடியாகத் துடித்தாள். எழுந்து அங்கும் இங்குமாக ஓடினாள். தலைவிரி கோலமாக கோபாக்கினியுடன் ஓடிய காட்சி அன்று மதுரையை எரித்த கண்ணகிக்குச் சமமாக இருந்தது.

அந்நேரம் அந்தச் சிறிய யன்னலின் ஞாபகம் வரவே அந்த யன்னலை ஒருதரம் நோக்கினாள். இரு கண்கள் அந்த யன்னல் துவாரத்திலிருந்து தெரிந்தது. சிறிய துவாரத்தின் வழியாக கையைக்காட்டி அவ்வுருவம் மல்லிகாவை அருகில் வரும்படி அழைத்தது. மல்லிகா நெருங்கினாள். சிறிய யன்னல் வழியே வந்த பெண்குரலொன்று ''நீ பயப்படாதே! நான் உன்னைக் காப்பாற்றுகின்றேன்'' என்று கூறி மேலும் தொடர்ந்தது.

''நீ நினைப்பதுபோல் இந்தக் கிழவன் நல்லவன் அல்லன். இதே போலத்தான் ஒருமாதத்திற்கு முன் எனது தம்பியைப் ''புரட்சிவாதி'' என்றுகூறி பலவந்தமாகக் கைது செய்ய எங்கள் வீட்டுக்கு வந்த சமயம் என்னைக் கண்டுவிட்டான். என்னையும் முகாமிற்கு அழைத்துச் செல்ல முனைந்தபோது, முற்கோபக்காரரான என் தந்தை தடுத்தார். அதிகாரி ஒருவன் துவக்கைக் காட்டிப் பயமுறுத்தினான். எட்டிப்பிடித்து துவக்கை வீசியெறிந்த என் தந்தையை கோபாக்கினி கொண்ட இன்னுமொரு சிப்பாய் தனது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். அங்கே ஓடிவந்த என் தாயும் அக்கொடியவனின் துப்பாக்கிக்கிரையானாள். ஒளித்திருந்த என் தம்பி ஆவேசத்துடன் துடித்துக்கொண்டு ஓடிவந்தான். அவனையும் பொசுக்க அக்கொடியவன் எத்தனித்த சமயம் அந்த வயதான அதிகாரி தடுத்தான். இதனால் என் தம்பியின் உயிர் தப்பியது.



படிப்பகம்

www.padippakam.com

''எவ்வளவு இரக்கமும் கடமையுணர்ச்சியும் உள்ள அதிகாரி'' என்று நான் எண்ணியிருந்தேன். இக்கொடூரமான காட்சியை நினைத்து நினைத்து உருகிப்போய் ஒரு வாரகாலமாக ஊண் உறக்கமின்றி மரணப் படுக்கையில் இருந்தேன். அப்போது இந்த அதிகாரிவந்து என்னைத் தேற்றுவார். தனக்கும் ஊரில் மனைவி மக்கள் இருப்பதாகக் கூறி என்னை அணைத்து ஆறுதல் கூறியபோதெல்லாம் அவன் மார்பில் கூட புரண்டு அழுதும் இருக்கின்றேன். நாளடைவில் நான் அவனைப் புரிந்து கொண்டேன். அவன் என் உடல் நிலையை விட உடலையே விரும்பி என்னோடு அனுதாபக் கண்ணீர் வடித்தது போகப் போகத்தான் தெரிய வந்தது.

''என் தம்பியைப் பற்றி விசாரிக்கும் போதெல்லாம் ஆண்கள் இருக்கும் அறையில் அவனை வைத்திருப்பதாகவும் சகல வசதிகளும் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் தங்கள் தலைமை அதிகாரி வந்து விசாரனை செய்தபின் விட்டுவிடுவதாகவும் தனது இச்சைக்கு இணங்கினால் எனது தம்பியை இந்த முகாமுக்குக் கொண்டு வருவதாகவும் தினமும் அவனைப் பார்க்க என்னை அனுமதிப்பதாகவும் கூறி என்னை அணைப்பான், தலையை வருடுவான். நான் அவனை என் தந்தையாக எண்ணினேனேன். அவனோ என்னைத் தாரமாக எண்ணினான். என் குடும்பத்தில் எஞ்சியிருக்கும் என் தம்பிதான் முக்கியமாக அப்போது தென்பட்டதாலும் நான் அவனது இச்சைகளுக்குச் சம்மதித்தாலென்ன, வெறுத்தாலென்ன அவன் என்னை விடப்போவதில்லை என்பதாலும் ஒரு சில கட்டங்களில் அவனுக்கு அடிமையாகிவிட்டேன். என் தம்பியின் முகத்தைக்காண வேண்டும் என்பதற்காக அவனது கைகளில் என் முகத்தைப் புதைத்தவண்ணம் தேம்பித் தேம்பி அழுவேன்.''என்று கூற மல்லிகா சோகம் மிக்கவளாக ''அதற்குப் பின்னாவது உங்கள் தம்பியை உங்களுக்குக் காட்டவில்லையா?'' என ஆவலுடன் கேட்டாள்.







படிப்பகம்

அதற்கு அக்குரல் தங்கையே! மீண்டும் என் கதையைக்கேள். நீ நினைக்கின்றாயா என் தம்பி உயிருடன் இருக்கின்றான் என்று? இல்லை அவனை ஏற்கனவே கொன்றிருப்பார்கள். இதையெல்லாம் எண்ணி எண்ணி, ''இனி ஏன் நான் மட்டும் இவ்வுலகில் வாழவேண்டும்?'' என்று சாகத்துணிந்தேன். மின்சார வயர்களைப் பற்களால் கடித்தேன். இறைவன் ''விதி வரும்வரையில் காத்திரு'' என்று எச்சரிக்கை செய்வது போல நான் தற்கொலை செய்ய முயற்சிக்கும் ஒவ்வொரு தடவையும் தடைகள் ஏற்பட்டேயாகும்.

''எனக்குச் சிகிச்சை செய்யவரும் டாக்டர் திருமதி இந்திராதேவி, சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்கவர். இவர் ஆறுதல் கூறி என்மீது இரக்கம் காட்டுவார். அடுத்த நாட்காலை அங்கு பால் கொண்டுவரும் நாற்பதுவயது மதிக்கத்தக்க வேலு இந்த வயது போன அதிகாரியைச் சந்தித்து எனது தம்பியும் இன்னும் இருவரும் தப்பித்து விட்டதாகவும் கூறியதோடு, எங்கெங்கெ இளம்பெண்கள் இருக்கின்றார்களென்று ஒரு பட்டியல் தயாரித்து அவற்றை அவனிடத்தில் வாசித்துக்காட்டினான். பின்னர் தலையைச் சொறிந்த வண்ணம் தனக்கும் பசிக்கின்றதென்றான். அப்போது அதிகாரி என்னைச் சுட்டிக்காட்டினான். அவர்களது பாஷை பின்னர்தான் எனக்கு விளங்கியது. அன்று மாலை அதிகாரி வந்து ''உன் தம்பி தப்பிவிட்டான் உனக்குத்திருப்திதானே'' என்று கோபக்குரலில் கூறிச்சென்றான். அவன் சென்ற சில நிமிடங்களில் பால்கார வேலு அசடு வழிந்தவண்ணம் என் அறைக்குள் நுழைந்தான். ''எனக்குப் பசிக்கிறது'' என்ற அர்த்தத்தை இப்போதுதான் புரிந்து கொண்டேன். பல பெண்களின் வாழ்க்கையைப் பாழாக்கும் இக்கொடிய அரக்கர்களை அழிக்க வேண்டும் என்று நான் என் சிந்தனைகளையெல்லாம் ஒன்றினைத்தேன். கிழட்டு அதிகாரி கூறிய ஏமாற்று வித்தைகளை நானும் பயன்படுத்தி ''மாமா நீங்கள் தான் எனக்கு உதவிசெய்யவேண்டும். என் தம்பி எங்கிருக்கின்றானென்று கண்டுபிடித்து நான் இங்கு சுகமாக ஒரு குறையுமில்லாமல் இருக்கின்றேன் என்று கூறவேண்டும். என்று வேலுவிற்கு என்மீது சந்தேகம் வராதவண்ணம் கூறியதும், தனது இச்சைக்கு இவள் கட்டுப்படுவாள் என்று எண்ணி ''பயப்படாதே நிச்சயம் உன் தம்பியைச் சந்திப்பேன்'' என்று கூறியவண்ணம் என்னை அரவணைத்தான். இதுதான் தக்கசமயம் என்று அவனது கழுத்து முடிச்சை முழுப்பலத்துடன் கடித்தேன். இவனை அழிக்கவேண்டுமென்றுதானிறைவன் என்னைத் தற்கொலை செய்யவேண்டாமென்று பலமுறைகளிலும் தடுத்தார் என்பது அப்போதுதான் விளங்கியது''. இவ்வண்ணம் கூறிய கதையைக்கேட்டு மல்லிகா,'' அக்கா மேலும் கூறுங்கள். உங்கள் கதைகள் எனக்கும் வீர உணர்ச்சிகளை ஊட்டுகின்றன. பிராமண குலத்திலே பிறந்ததால் இரக்கம், ஜீவகாருண்யம், சாந்தம் போன்றவற்றையே இதுவரை அறிந்திருந்தேன். வாழ்க்கையில் இன்னும் கடைப்பிடிக்க வேண்டிய குணங்கள் அநேகம் இருக்கின்றன என்பதை இப்போதுதான் உணருகின்றேன்'' என்றாள்.

www.padippakam.com

அவ்வுருவம் தொடர்ந்தது. தங்கையே நான் இங்கிருந்து இந்தப்பாவிகள் ஒவ்வொருவரையும் அழிக்கவேண்டுமென்று டாக்டர் இந்திராதேவியிடம் இருந்து உதவி கேட்டேன். ''ஏய்ட்ஸ்'' (Aids) நோய்க்கிருமிகளை என் உடலுள் ஊசிமூலம் பாய்ச்சும்படி நான் கேட்ட வேண்டுகோளை டாக்டர், இது தனது தொழிலுக்கு எதிரானது என்று நிராகரித்துவிட்டார். இதையெல்லாம் கேட்ட மல்லிகா ''ஏனக்கா இப்படி டாக்டரைக் கேட்டீர்கள்''என்ற வினாவை விடுத்தாள். அப்போது ''கதையைக்கேள்! இதை நான் கேட்டதன் காரணம் ஏற்கனவே என்னை எல்லோருக்கும் அந்த அதிகாரி இரையாக்கிவிட்டான். இதுதான் முக்கிய காரணம். அது போகட்டும் இப்போது நான் சொல்வதைக்கேள்! டாக்டர் இந்திராதேவி எனது அறைக்கு வருகின்றா. இந்தா! இந்தச் சவர்க்காரத்தை வாயில்விட்டுச் சப்பி குதப்பி விட்டு வாயால் நுரை வந்திருப்பதுபோலப் பாசங்குசெய். மிகுதியை நான் பார்த்துக் கொள்ளுகின்றேன்'' என்று கூறி அவ்வுருவம் யன்னலைவிட்டு விலகியது.





படிப்பகம்

இதுவரையில் இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு நின்ற மல்லிகாவிற்கு உடம்பெல்லாம் விறைத்தது. அது மட்டுமல்லாமல் தலையும் சுற்றியது. உலகமே தெரியாது வாழ்ந்த அவளுக்கு இது ஒரு புதிய அனுபவமாகத் தோன்றியது. ஒருமுறை சிந்தித்தாள். அவள் கூறியது போல் சவர்க்காரத்தை வாயினுட் புகுத்தி நுரை தள்ளியபடி கட்டிலில் நடைப்பிணமாக விழுந்தாள். தன் கற்பைக் காப்பாற்ற வேண்டுமென்று துடியாகத் துடித்தாள். அந்த இராணுவ அதிகாரி மேல் நாட்டுக் காதற் பாட்டொன்றை இசைத்த வண்ணம் குதூகலத்துடன் அவளது அறைக்குள் நுழைந்தான். மல்லிகாவின் நிலை கண்டு ஏமாற்றமடைந்தவனாகக் குளறினான். டாக்டர் இந்திராவை அழைத்துச் வரும்படி கத்திவிட்டு, ஏமாற்றத்துடன் கதவை அடித்துச் சாத்திவிட்டு வெளியேறினான் அந்த அதிகாரி. மல்லிகா கண்களை மூடியபடியே உடல் ஒடுக்கத்துடன் அசையாது கிடந்தாள். தங்கை என்ன ஆனாளோ என்று சிந்திக்கத் தொடங்கினாள்.

ஜீப்பில் துளசியம்மாளை ஏற்றிக் கொண்டு ஒரு கையில் சிகரெட்டை பிடித்தபடி அந்த முரட்டு அதிகாரி மிகவும் விரைவாகச் சென்றான். இடையிடையே துளசியைப் பார்ப்பதும் கண்ணைச் சிமிட்டுவதுமாக சேட்டைகள் பல புரிந்த வண்ணம் இருந்தான். திடீரென வானமே இடிந்து விழுவது போன்ற ஒரு பெரிய சத்தம். துளசி பற்றை ஒன்றின் மேல் தூக்கி எறியப்பட்டாள். அதிகாரி வாகனத்தின் அடியில் அகப்பட்டு குற்றுயிராகத் துடி துடித்துக் கொண்டிருந்தான். இருட்டிலிருந்து ஐந்து இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் வெளிப்பட்டனர். ஒருவர் வாகனத்திற்குள் இருந்த ஆயுதங்களை, மற்றும் பொருட்களை எடுப்பதில் ஈடுபட்டார். இன்னொருவர் குற்றுயிராகத் துடித்துக் கொண்டிருந்த அதிகாரியைத் துப்பாக்கியால் சற்றும் கலங்காமல் சுட்டார். ஏனையோர் நாலா பக்கமும் சுழன்று பார்த்த வண்ணம் இருந்தார்கள்.

அவர்களுள் ஒருவர் பற்றைக்குள் சிக்குண்டு கிடந்த துளசியைக் கண்டுவிட்டார். கையில் இருந்த ஒளிக்கருவியினால் (Torch Light) அவள் முகத்திற்கு அடித்துக் கொண்டு முரட்டுத்தனமாக அவளைக் கீழே இழுத்து விழுத்தினார். பின் கோபத்துடன் ''பாருங்கள்! அழகு தேவதை! எம்மானத்தை மாற்றானுக்கு விற்க வந்த மோஹினி!'' என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டு முட்களின் மேல் இரத்தக் காயங்களுடன் கிடந்த துளசியை மறுபடியும் தொடவிரும்பாது ''எழும்படி'' என்று அதட்ட, துளசி பயத்துடன் எழுந்து நின்றாள். ''மானங் கெட்டு வாழ்வதைவிட சாவது மேல்'' என்று கூறிக்கொண்டு இவளுடன் நேரத்தை வீணாக்கக் கூடாது என்ற பாணியில் துப்பாக்கியை அவளை நோக்கிக் குறிபார்த்துச் சுட ஒரு இளைஞர் எத்தனிக்கையில் மற்றைய ஒருவர் ''நிறுத்துங்கள்! எதற்கும் அவசரப்படாதீர்கள்'' என்று கூறிக்கொண்டு அவளது இடது கையைத் தூக்கி எல்லோரும் பார்க்கும் வண்ணம் காண்பித்தார். எல்லோரும் வெட்கித் தலை குனிந்தனர். ''ஆம்! இவளை இரும்புச்

சங்கிலியினால் கட்டித்தான் அந்த இராணுவ அதிகாரி எங்கோ இவளைக் கடத்திச் சென்றிருக்கின்றான். உரிய சமயத்தில் இவளை நாங்கள் காப்பாற்றி இருக்கின்றோம். தங்கையே! எங்களை மன்னித்துவிடு. பணம் படைத்த தமிழர்கள் சிலர் தங்கள் சொத்துகளையும் பணத்தையும் காப்பாற்றிக்கொள்ள தங்கள் மானத்தையும் தங்கள் பிள்ளைகளையும் இராணுவ அதிகாரிகளுக்கு விற்றுவிடுகின்றார்கள். இப்படித் தரங்கெட்ட செயல்களை ஒரு சாரார் செய்வதனால் நாம் எல்லோரையுமே சந்தேகப்பட வேண்டியுள்ளது. நீயாவது வாய் திறந்து கூறியிருக்கலாமல்லவா?'' என்று கூறி முடிக்குமுன், துளசி பச்சிளம் குழந்தை போல் அழ ஆரம்பித்து விட்டாள். அந்த ஐவருக்கும் தலைவரான சத்தியன், அவளைத் தொடர்ந்து அழவிடாது ''பயப்படாதே, நீ ஆபத்திலிருந்து தப்பி விட்டாய், வா! உன்னை நாளை காலையில் உனது வீட்டிற்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்கின்றோம்'' என்றார். துளசி கொடிய இராணுவத்திடம் பட்ட கொடுமைகளினால், இவர்கள் பழக்கப்பட்டவர்கள் அல்லாத போதும், தன்னுடன் அவர்கள் நடந்து கொள்ளும் விதத்தில் தனக்கு எந்தவொரு ஆபத்தும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள். தனது சகோதரி மல்லிகா அந்த கிழட்டு அதிகாரியிடம் என்ன பாடுபடுகின்றாளோ! என்று அந்த நிமிடமே சிந்திக்கலானாள்.

மல்லிகா கண்களை மூடிய வண்ணம் உடம்பில் உயிரில்லாதவள் போலக் காட்சியளித்தாள். டாக்டர் இந்திராதேவி மல்லிகாவின் அருகே இருந்து ''மகளே! நீ ஒன்றுக்கும் பயப்படாதே'' என்றவாறு அன்புடன் மெதுவாகத் தலையை வருடினார். மல்லிகா பெண் குரல் கேட்டுக் கண்களை மெதுவாகத் திறந்தாள். இந்திராதேவி தான் ஒரு டாக்டர் என்றும், தன்னை இந்த முகாமிற்கு அரசினர் மாற்றியுள்ளார்கள் என்றும் ஆறு மாத காலமாக இந்தக் கொடியவர்களின் அக்கிரமங்களைக் கண்ணூடாகப் பார்த்த வண்ணம் இருப்பதாகவும் கூறினார். இது பற்றி மேலிடத்திற்கு அறிவிக்கவும் முடியாதென்றும், இம்முகாமில் இந்த வயது போன அதிகாரி, ''தான் வைத்ததுதான் சட்டம்'' என்ற போர்வையில் எத்தனையோ அட்டூழியங்களைச் செய்கின்றான். ஆனால் தனக்கு நல்ல மரியாதை செலுத்துவதாகவும் கூறினார். மேலும் கூறுகையில் தான் ஒரு டாக்டராக இருப்பதாலும், அந்த அதிகாரி தனது உடல் நலத்தைப் பற்றி மிகவும் அக்கறை உள்ளவனாகையாலும் நூறு வருடங்கள் வாழ வேண்டும் என்பதற்காகவும் அவன் தன் மேல் ஒரு பக்தியையும், விசுவாசத்தையும் வைத்திருப்பதாகவும் கூறினார். மேலும் ''கேள் மகளே! இந்த அதிகாரி மிகவும் கெட்டவன். தனது நூறு வருட நீண்ட வாழ்க்கைக்கு அத்தியாவசியம் இளம் பெண்களின் உடலுறவு என்ற எண்ணத்தையும், அந்த எண்ணத்தைத் தீர்க்க தமிழ் இளம் பெண்கள் தனக்கு அடிமைகளாக வேண்டும் என்ற மனப்பான்மையும் கொண்டவன்'' என்று கூறினார். தொடர்ந்து ''அடுத்த அறையில் இருக்கும் தேவகியின் வாழ்வை அநியாயமாகச் சிதைத்து விட்டான். அவள் உன்னைக் காப்பாற்றும்படி ஒரு

www.padippakam.com

திட்டத்தைக் கூறி என்னிடம் அதற்கான ஒரு உறுதியையும் வேண்டியுள்ளாள். இப்போது நான் உனக்கு ஒரு ஊசியைப் போடுகின்றேன். நீ மயக்கமடைவாய். உன்னைக் காலையில் உன் வீட்டிற்கு அனுப்புவதற்கு ஏற்ற முயற்சிகளை நான் செய்கின்றேன். என்னை நீ பூரணமாக நம்பலாம்'' என்று கூறியவண்ணம் மயக்க ஊசியை ஏற்றி அவள் தலையை வருடி அவளை நித்திரையாக்கிவிட்டு அதிகாரியிடம் சென்றார். அதிகாரி எரிச்சலுடன் ''அவளுக்கென்ன?'' என்று கேட்கவும் இந்திராதேவி அதிகாரியை தனிமையில் அழைத்துச் சென்று ''இவள் ஒரு மாதக் கற்பிணியாக இருக்கின்றாள். அத்துடன் இவள் இரத்தத்தில் ''எய்ட்ஸ்'' (Aids) நோய்க்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்நோய்க்கு உலகில்

## தாத்தா படி...



தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களை ஒரு நண்பர் தன் மகளின் திருமண வரவேற்புக்கு வந்திருந்து வாழ்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

''இந்த தள்ளாத வயசிலே என்னை எதற்கு சிரமப்படுத்துகிறாய்? கண் பார்வை வேறு குறைந்து போயிருக்கிறது. என்னை விட்டு விடேன்'' என்று கூறிப் பார்த்தார் தமிழ்த் தாத்தா.

ஆனால், அந்த நண்பர் விடுவதாயில்லை. கார் அனுப்பி அழைத்துச் சென்றார். வரவேற்பை மூன்றாவது மாடியிலே வைத்திருந்தார்கள்.

ஐந்து வயது பாலகன் ஒருவன் அவர் தடியைப் பிடித்து மாடிக்கு அழைத்துச் சென்றான். ஒவ்வொரு படிக்கும், 'தாத்தா... படி! படி!' என்று எச்சரிக்கை செய்து அவர் இடறிக் கொள்ளாமல் நடக்க உதவினான்.

வாழ்த்து தெரிவித்த தமிழ்த் தாத்தா சொன்னார்.

''இந்த வரவேற்புக்கு வந்ததிலே நான் ஒரு விஷயம் தெரிந்து கொண்டேன். சொல்லப் போனால் எனக்கு நான் கொஞ்சம் நிறைய படித்து விட்டதாகவே எண்ணம். பார்க்கப் போனால் இறுமாப்பு என்று கூடச் சொல்லலாம். ஆனால் தடியைப் பிடித்து என்னை மாடிக்கு அழைத்து வந்த சிறுவன், எத்தனை தடவை 'தாத்தா படி! தாத்தா படி!' என்று சொல்லி விட்டான் தெரியுமா? அப்பொழுதுதான் நாம் கற்றது கைம்மண் அளவு என்று விளங்கியது. நானும் இன்னும் படிக்க வேண்டியது இருக்கிறது...!''

சி. பன்னீர்செல்வன்.



படிப்பகம்

www.padippakam.com

மருந்தே கிடையாது. இவளது இரத்தம், மற்றவர்களின் இரத்தத்தில் கலந்துவிட்டால் அவர்களுக்கும் இந்நோய் பிடித்துவிடும். அதிலும் உங்களைப் போன்ற வயதுடையவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்'' என்று கூறியபடி டாக்டர் தனது கைகளை தொற்று நோய்த் தடை மருந்தினால் அடிக்கடி கழுவுவதன் மூலம் அதிகாரியை மேலும் பயமுறுத்தினார். அதிகாரி பயத்தில் நடுங்கியவாறு ''டாக்டர், உடனே என்னைப் பரிசோதியுங்கள். நானே இவளைக் காலையில் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு வந்தேன்'' என்று மன்றாட்டத்துடன் டாக்டரைக் கேட்டான். அதற்குப் பதிலாக ''இல்லை, இரத்தத்துடன் இரத்தம் சேர்ந்தால் அல்லது காயங்கள் இருந்து அவளது இரத்தம் அதனுள் பட்டிருந்தால் அல்லது புகுந்திருந்தால் இந்நோய் நிச்சயம் வரும்'' என்று கூறி அவனைப் பயப்பட வைத்ததும் உடனே அதிகாரி தனது கைகளை நன்றாகப் பார்வயிட்டான். டாக்டர் இவனது பயத்தை கண்டு தனக்குள் சிரித்தவண்ணம் ''இவளை விட்டு வைப்பது தமிழ் மக்களுக்கே ஆபத்து. இவளைக் கொல்வதில் பாவம் இல்லையென நான் கருதுகிறேன். காரணம் இவளால் இன்னும் பல இளைஞர்கள் அழிக்கப்பட இடமுண்டு. ஆகவே என்னிடம் ஒரு மருந்து இருக்கிறது. அதைக் கொடுத்தால் இவள் ஒரு கிழமைக்குள் சந்தேகமின்றி இயற்கை மரணம் எய்தியவள் போல இறந்துவிடுவாள். அதற்கு உங்கள் அனுமதி வேண்டும்'' என்றார். இதைக் கேட்ட அதிகாரி எதையோ சாதிக்கப் போகின்றவர் போல ''இல்லை, இவளை அப்படியே நாளைக்கே விடுதலை செய்யப் போகின்றேன். இவள் மூலமாவது தமிழ் இளைஞர்கள் அழியட்டும்'' என்று ஆத்திரத்துடன் கத்தினான். அத்துடன் டாக்டர் கூறிய இயற்கை மரண மருந்தை பக்கத்து அறையில் இருக்கும் தேவகிக்குக் கொடுக்கும்படியும் அவளை நாளை விடுதலை செய்யப் போவதாகவும், சந்தோஷமாகத் தாய் தந்தையரிடம் செல்லட்டும் என்றும் கூறி நகைச்சுவை செய்தவனைப் போல் ஏளனமாகச் சிரித்துவிட்டுச் சென்றான். டாக்டர் தேவகியின் திட்டத்தைப் பயந்து பயந்து செயற்படுத்த அதில் எதிர்பாராத வெற்றி கிடைத்ததையும், ''ஒரே எறியில் இரு மாங்கனிகள்'' என்பது போல தேவகியையும் தப்ப வைக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்ந்தாள். டாக்டர் உடனடியாகவே தேவகியைச் சந்திக்க அவளது அறைக்குச் சென்றார். ஆனால் அங்கு ''தேவகியை காணவில்லை''. இதுபற்றி அதிகாரியிடம் விசாரித்த போது, ''ஓ..... நான் மறந்துவிட்டேன். அவள் இப்போது கடும் வேலையில் இருப்பாள். நீங்கள் நாளை அதிகாலை நான்கு மணிக்கு அவளுக்கு மருந்தைக் கொடுங்கள். இரண்டு கழுதைகளையும் காலை ஆறு மணிக்கே விடுதலை செய்துவிடலாம்'' என்று ஏளனச் சிரிப்புடன் கூறினான். டாக்டர், தேவகியின் நிலையை எண்ணி மனம் வருந்திய போதும் அடுத்த நாள் காலையில் அவள் விடுதலை அடையப் போவதையிட்டு சற்று ஆறுதலடைந்தார். அதேவேளை இவ்விடயம் அதிகாரிக்கு தெரிய வந்தால் தனது நிலை என்னவாகும் என்பதையும் சிந்தித்தவண்ணம் உறங்காமல் அதிகாலை நான்கு மணி எப்போது வரும் என்று காத்திருந்தார். திடீரென பயங்கர துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டு



படிப்பகம்

www.padippakam.com



# தாய் நாடு

தமிழீழம் எமது தாய் நாடு
தன்மானம் எங்கள் உயிர் மூச்சு
அமிழ்தினுமினியது தமிழ் மொழியாம்
அதுவே எங்கள் தாய் மொழியாம்

கடல் வளம் நிலவளம் நீர்வளமும்
கற்பக தருக்களும் நிறை நாடு
சுடர் மிகு அறிவு, வீரத்தினால்
சுதந்திர நாடாய் மாற்றிடுவோம் !

ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்
ஓர் குலமாகச் சேர்ந்திடுவோம்
வேற்றுமையை நாம் களைந்திட்டு
நற்றமிழீழம் காத்திடுவோம்.

வரிகள் - சகி. பிராங்பேர்ட் ஓவியம் - நிரஞ்சன்.



படிப்பகம்

www.padippakam.com

டாக்டர் தன்னையும் அறியாது அவ்விடத்தை நோக்கி விரைந்தார். அங்கே மூன்று இராணுவத்தினர் அரைகுறை உடையுடன் இரத்த வெள்ளத்தில் புரண்டு கிடந்தனர். தேவகி இவர்களையும் அழித்து தன்னையும் அழித்துக் கொண்டாள். அவள் தான் நினைத்ததை சாதித்துவிட்டாள். இந்த அபலைப் பெண்ணின் பரிதாப நிலை கண்டு மனம் நொந்தவண்ணம் அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

நாராயணசர்மா, தனது கோவிலில் பாதியிரவு வரை மனம் திறந்து ஓலமிட்டுத் தன் கவலைகளைத் தெய்வத்திடம் ஒப்படைத்து, தன் பிள்ளைகளுக்கு ஒருவித துன்பமும் ஏற்படக்கூடாது என்று வேண்டிக்கொண்டு தனது வீட்டிற்கு வந்து, அறைக்குள் நுழைந்தார். அங்கே மனைவி உணர்ச்சியற்றவளாகக் காணப்பட்டாள். அசைத்து அசைத்து எழுப்பினார். எழும்புவதாகத் தோன்றவில்லை. உடனே டாக்டரிடம் செல்ல அவர் மனம் துடித்தது. ஒன்றன் பின் ஒன்றாக எத்தனை துன்பங்கள். ''ஆ! தெய்வமே.....'' என்று அலறிக்கொண்டு நள்ளிரவையும் பொருட்படுத்தாது அயலில் உள்ள டாக்டர் ரவியிடம் ஓடினார். டாக்டர் வீட்டுக் கதவைப் பலமாகத் தட்டினார். உள்ளே தூங்கிக் கொண்டிருந்த டாக்டர் மனதில் பீதி ஏற்பட்டது. ''இந்த ஊரடங்குச் சட்ட நேரம் யார்தான் தட்டுகிறார்களோ?'' என்று பயந்தவண்ணம் இருந்த டாக்டருக்கு ''நான் நாராயணசர்மா, கதவைத் திறவுங்கள் டாக்டர் மிகவும் அவசரம்'' என்ற ஐயரின் குரல் டாக்டருக்குச் சற்று அமைதியை ஏற்படுத்தியது. உடனே கதவைத் திறந்து ஐயரை உள்ளே அழைத்து ''இந்த நேரம் வெளியில் உலாவக் கூடாது'' என்று கூறியதோடு ஐயருக்கு நேர்ந்த சகல துன்பங்களையும் தான் கேள்விப்பட்டதாகவும் டாக்டர் கூறினார்.



● உலகப் புகழ் பெற்ற 'மோனோலிசா' ஓவியத்தை அனைவரும் பார்த்திருக்கலாம். இதோ அதைப் பற்றி மேலும் சில தகவல்கள்.

நிகரற்ற அழகும், செல்வமும் ஒருங்கே இணையப் பெற்ற 'லிசாகொர்மினி' என்ற பெண்ணின் உருவம்தான் 'மோனோலிசா' ஆகும். அதை வரைய, அதன் ஓவியர் 'லியனார்டோடாவின்சி' எடுத்துக் கொண்ட காலம்... ஆறு ஆண்டுகள்! அந்தப் படம் வரைய ஆரம்பிப்பதற்கு சில நாட்கள் முன்பு 'லிசா'வின் குழந்தை இறந்தது. அதற்கு துக்கம் அனுஷ்டிக்கத்தான் அவள் அப்படத்தில் கறுப்பு உடையில் காணப் படுகிறாள். அப்படத்தை பொக்கிஷம் போல் கருதிக் காத்து வந்த டாவின்சி, சிறிது காலத்திற்குப் பின், பிரான்சின் மன்னருக்கு அதை 12,000 பிராங்குக்கு விற்றார்.

ஜி.ஏ.கே. ராஜீவ்.



படிப்பகம்

www.padippakam.com

பின்னர் தனது மனைவி காலை நடந்த சம்பவத்தை அடுத்து திடீரென உணர்ச்சியற்ற நிலையில் இருப்பதாகவும் தான் எழுப்பிப் பார்த்தும் கூட அசைவின்றி தூக்க நிலையில் இருப்பதாகவும் உடனே தன்னுடன் வந்து தன் மனைவியைப் பார்க்கும் படியும் ஐயர் கெஞ்சி மன்றாட, டாக்டர் ரவியும் ஐயரின் மீளாத்துயர நிலையை நன்கு புரிந்து கொண்டு பிரதான வீதி வழியாகச் செல்லாமல் ஒழுங்கைகள் ஒற்றையடிப் பாதைகள் மூலம் ஐயரையும் அழைத்துக் கொண்டு டாக்டர் ஒருவாறு ஐயரின் வீட்டிற்கு சென்று ஐயரின் மனைவியை நன்கு பரிசோதித்து அதிர்ச்சியினால் ஏற்பட்ட நோய்க்குரிய மாத்திரைகளைக் கொடுத்து ''படிப்படியாக நோய் குணமாகிவிடும் பயப்பட வேண்டாம்'' என்று ஆறுதல் சொல்லி மயக்கம் தெளிவு பெற ஒரு ஊசியைப் போட்டார். இரண்டு மணித்தியாலங்கள் கழித்து மயக்கம் தெளிந்த பின் மாத்திரை ஒன்றைக் கொடுக்குமாறும் கூறிவிட்டு டாக்டர் தனது வீட்டிற்குச் சென்றார். இரண்டு மணித்தியாலங்கள் கழிந்ததும் உணர்ச்சி பெற்ற தன் மனைவியைத் தென்பு படுத்தி மாத்திரையைக் கொடுத்துவிட்டு செளகரியமான முறையில் நீண்டு படுத்துக் கொள்ளுமாறு வசதிகள் செய்து கொடுத்தபின் வழமை போல் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு தனது கோவிலுக்கு சென்று பூசைகளை ஆரம்பித்தார். டாக்டரும் நித்திரை குழம்பியதால் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் ஐயரின் நிலையையும், நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டுவரும் தமிழரின் நிலையையும் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தார்.

கோபாலும் நித்திராதேவியின் அரவணைப்பின்றி விழித்தவண்ணம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். திடீரென மக்கள் ஆரவாரத்துடன் வீதி ஓரமாகக் காணப்படுவதை யன்னல் வழியாகக் கண்டு சற்று கூர்ந்து அவதானிக்கும் போது அங்கே பலர் கூடி எதையோ பார்த்து உருக்கமாகக் கதைப்பதை உணர்ந்தான். உடனே அவசரமாக வெளியே ஓடினான். அங்கே மல்லிகாதேவி மயக்கமுற்ற நிலையில் சுவருடன் சாத்தப்பட்டு இருந்தாள். சனத்தை விலத்திக் கொண்டு தன்னையும் அறியாமல் அவளைத் தூக்கிக் கொண்டு ஐயரின் வீட்டிற்கு ஓடினான். அங்கே இருந்த ஒரு வாங்கில் மல்லிகாவைக் கிடத்திவிட்டு ஐயரைத் தேடி கோவிலுக்கு ஓடினான். கோபாலின் அவசர வருகையைக் கண்ட ஐயர் பதைத்துப் போய் ''என்ன தம்பி?'' என்று அச்சத்துடன் வினாவினார். ''ஐயா! உங்கள் மகள் மல்லிகாதேவி வந்துவிட்டாள். ஆனால் அவள் மயக்கமுற்ற நிலையில்தான் காணப்படுகின்றாள். நான் ஓடிச் சென்று டாக்டர் ரவியை அழைத்து வருகிறேன்'' என்று மறுபடியும் ஓடினான். ஐயர் கீழே விழுந்து ''தெய்வமே! என் குழந்தைகளுக்கு எந்தக் கெடுதலும் நடந்திருக்கக் கூடாது. கடந்த ஐம்பது வருடங்களாக உன்னிடத்தில் நான் எதையும் கேட்டதில்லை. இப்போது மன்றாடிக் கேட்பது என் பிள்ளைகளுக்கு எதுவிதமான பங்கமும் ஏற்படாது என் கையில் ஒப்படைக்க வேண்டும்'' என்று அழுதவாறு ''ஐயோ'' என்று தலையை மோதிக் கொண்டார். பின் ஓட்டமும் நடையுமாக வீட்டிற்குச் சென்றார். அங்கே மயக்கமுற்று இருந்த மல்லிகாவிற்கு



படிப்பகம்

www.padippakam.com

தனது மணிப் பையிலிருந்து விபூதியை எடுத்து மந்திரம் உச்சரித்து நெற்றியில் பூசினார். தனது இரண்டாவது மகள் துளசிக்கு என்ன நடந்திருக்கும் என்ற அச்சம் அவரை மேலும் வாட்டியது. டாக்டர் ரவியும், கோபாலும் அவசரமாக வீட்டிற்குள் நுழைந்தனர். ரவி உடனே மல்லிகாவைச் சோதித்து ''ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். இன்னும் சிறிது நேரத்தில் எழுந்து விடுவா'' என்று ஒரு ஊசியைப் போட்டுவிட்டு ''எழும்பியதும் தொந்தரவு கொடுக்காது யாதேனும் குடிக்க, சாப்பிடக் கொடுங்கள்; மிகவும் பலவீனமாக இருக்கின்றா'' என்று கூறிவிட்டுச் சென்றார். கோபாலும் தான் கூறிய பொய்யிலிருந்து தப்பிவிட்டதாக எண்ணிக் கொண்டு ''ஐயா, நான் சென்று வருகிறேன்'' என்றான். ஐயர் உடனே ''தம்பி! துளசிக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. மல்லிகா எழுந்தவுடன் அவளைக் கேட்டுவிட்டு போய்ப் பார்க்க வேண்டும், வருகிறாயா?'' என்றார். ''ஆம், எனது நண்பனிடம் எங்கே முகாம் இருக்கிறது என்று அறிந்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான். சிறிது நேரத்தின் பின் மல்லிகா லேசாக அசைவதைக் கண்ணுற்ற ஐயர் ''மல்லிகா, மல்லிகா'' என்று எழுப்பினார். தந்தையின் குரல் கேட்ட அவள் தன்னையறியாமல் ''அப்பா'' என்று விம்மி விம்மி அழத் தொடங்கினாள். டாக்டர் ரவி கூறியதை உணர்ந்த ஐயர் ''நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. இதை முதலில் சாப்பிடு'' என்று தட்டை நீட்டினார். அவள் மறுத்துவிட்டாள். பின் ஒருவாறு கஷ்டப்பட்டு ஒரு கிண்ணம் பாலைக் குடிக்க வைத்தார். இதுவரை நேரமும் தாயார் தன் அருகில் வராது, தூரத்தில் தானும் தன்பாடுமாக இருந்ததைக் கண்ட மல்லிகா ''அம்மா'' என்று அவளருகே சென்றாள். ஐயரும் பின்னால் சென்று ''உங்களுக்கு ஏற்பட்ட இந்தக் கதியினால் அம்மாவிற்கு இந்த நிலை! டாக்டர் மருந்து கொடுத்திருக்கின்றார். அம்மாவிற்கு நாளடைவில் சுகம் வந்துவிடும்'' என்று மல்லிகாவைத் தேற்றினார். மல்லிகா பாசம் அதிகமாகக் கொண்டு தாயைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கினாள். ''தொடர்ந்து அழுவதில் எந்தப் பயனும் இல்லை. இன்னும் செய்ய -வேண்டிய கடமைகள் எத்தனையோ உள்ளன. எங்கே துளசி? ஏன் இன்னும் அவளை விடவில்லை. உனக்கு என்ன நடந்தது? விபரமாகக் கூறு'' என்று பதட்டத்துடன் கேட்டார். அவளும் அழுதவண்ணம் அங்கு ஆரம்பத்தில் இருந்து மயக்கமுறும் நிலை வரை நடந்த சம்பவங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறினாள். ஐயர், டாக்டர் இந்திராதேவியையும் தேவகியையும் மனதார வாழ்த்தி, ''இவர்கள் மானிட உருவில் வந்த தெய்வங்கள், இவர்களைப் போல் துளசியையும் காப்பாற்ற எனக்கு இன்னும் தெய்வங்கள் இருக்கின்றனர். கடவுள் என்னை நீண்ட காலம் கலங்க வைக்கமாட்டார்'' என்று வருத்தப் பட்டார். பின்னர் கோவிலை நோக்கிச் சென்றார்.

துளசியைப் புரட்சிவாதிகள் காடுகளுக்கிடையால் அழைத்துச் சென்று அடர்ந்த காட்டுப் பற்றைகளுக்கிடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய வானில் ஏற்றிக் கொண்டு தாம் இருக்கும் இடத்திற்குக் கூட்டிச் சென்று, துளசியை வானில் இருக்கும்படி கூறிவிட்டு



படிப்பகம்

www.padippakam.com

அனைவரும் அந்தப் பாழடைந்த வீட்டுக்குள் நுழைந்தனர். சிறிது நேரம் கழித்து அவளை உள்ளே வரும்படி கூப்பிட்டார்கள். இராணுவத்தினரின் அட்டகாசத்தை அனுபவித்திருந்த துளசிக்கு சற்றுப் பயம் குறைந்திருந்த போதிலும் தயக்கத்துடன் மெதுவாக உள்ளே சென்றாள். அங்கே நரை முடியுடன் கூடிய வயதான மூதாட்டி ஒருவர் ''பயப்படாமல் உள்ளே வாடி பிள்ளை'' என்று பொக்கு வாயால் அழைத்த குரல் துளசிக்கு மேலும் தென்பை ஊட்டியது. இந்தத் தள்ளாத வயதிலும் பாட்டி புரட்சிவாதி என்று தன்னைக் கூறிக் கொண்டு, வந்ததும் வராததுமாக ''நீ எப்படியடி பிள்ளை அந்த ஆமிட்டை மாட்டினனி?''என்று கேட்ட கேள்விகள் துளசிக்கு ஒரே வியப்பாக இருந்தது. இதற்கிடையில் சத்தியன் குறுக்கிட்டு ''ஆச்சி முதலில் இந்த இரத்தக் கறைகளைத் துடைத்து மருந்து போடணை, எங்களுக்கும் பசி. எல்லோருக்கும் சாப்பாடு போடணை'' என்று ஆச்சியின் பேச்சுகளைத் திசைதிருப்பினான். ஆச்சியும் அன்பினால் சத்தியனைக் கண்டிக்கும் முகமாக ''எட, இவன் என்னை வாய் திறக்கவும் விடான்'' என்று உள்ளே சென்று பின்னர் ஈரத்துணி ஒன்றினால் துளசியின் இரத்தக் கறைகளை அகற்றி மருந்து கட்டி சிறிய வாங்கில் துளசியை அமரும்படி செய்தாள். இதற்கிடையில் மற்றவர்கள் ஆளுக்கொரு வேலையாக குசினிக்குள் செய்து கொண்டிருந்தனர். துளசி அந்த சிறிய வாங்கில் இருந்தவண்ணம் நாலா பக்கமும் கவனித்தாள். இதுவரை காலமும் பாடசாலையும் வீடுமாக இருந்தவளுக்கு, ''தீவிரவாதிகள், புரட்சிவாதிகள் இவர்கள் யார்? இவர்களது நோக்கமென்ன? எப்படி வாழ்கிறார்கள்?'' என்று சிந்தனையேதும் இருக்கவில்லை. பாட்டியும் இவர்களுடன் கூடி ஓடியாடி நகைச்சுவையாகக் கதைத்துக் கொண்டிருக்கும் சமயம் ஒருவன் ''ஆச்சி! ஆமி வருகுது! ஓடிப் போய் ஒளியுங்கோ'' என்று பகிடியாகக் கூற, ஆச்சி சுவரில் மாட்டியிருந்த துப்பாக்கியை ஒரே நொடியில் பாய்ந்து கைகளில் எடுத்த காட்சி எல்லோரையும் சிரிக்க வைத்தது. துளசி தன்னை மறந்து கொல்லெனச் சிரித்தாள். சிரிப்பு அடங்கியதும் எல்லோரும் சாப்பிட அமர்ந்தனர். பாட்டி எல்லோருக்கும் சருவப்பானையில் இருந்து சுடச் சுட மரவள்ளிக் கிழங்கும், சம்பலும் கொடுக்க ஆவலோடு எல்லோரும் சாப்பிட்டார்கள். சாப்பாடு முடிந்ததும் பாட்டி

தம்பி!
தொந்தரவுகளைக் கண்டு
துவண்டு விடாதே...
தங்கம் கூட
அனலில் வெந்து,
அடி வாங்கி,
இன்னல்களை சந்தித்தால்தான்
மின்ன முடிகிறது – கழுத்தில்!

— காரை புரட்சிமணி.





படிப்பகம்

www.padippakam.com

# உதவிடுங்கள்.

அன்பான தமிழ் மக்களே! எமது தாயகமாகிய தமிழ்ஈழத்தில் சிங்கள இனவாத அரசாங்ககளால் தொடக்கப்பட்ட இனக் கலவரங்களுக்கும், அரச இராணுவ பயங்கரவாதத்தாலும் தமிழ்மக்களுக்கும் ஏற்பட்ட இழப்புகள் பல. எல்லா இழப் புகளிலும் உயர்ந்து நிற்பது உயிர்இழப்பு இவ்வுயிர் இழப்பின் காரணமாக இன்று தமிழ்ஈழத்தில் 9000 த்திற்கும் மேற்பட்ட பெண்கள் கணவன்மாரை இழந்து அனாதரவற்ற நிலையில் வாழ்ந்து கொண்டுடிருக்கிறார்கள். 4000 த்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தம் பெற்றோரை இழந்து சோகத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விருசாரருக்கும் ஆதரவளிக்க வேண்டியது தமிழ்மக்களாகிய எமது கடமையாகும்.

பெற்றோரை இழந்த சிறுவர்களை தமிழீழத்தில் செஞ்சோலை எனும் அமைப்பு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. இவ்வமைப்புக்கு ஜெர்மன் தமிழ் மாணவர் அமைப்பினர் தம்மால் ஆன உதவிகளைச் செய்து வருகின்றனர். இவ்வுதவியை மேலும் வலுப்படுத்த இரங்கும் உள்ளம் படைத்த தமிழ்மக்களாகிய நீங்கள் தங்களால் இயன்ற உதவிகளை ஜெர்மன் தமிழ் மாணவர் அமைப்பிற்கு வழங்கி பெற்றோரை இழந்த பிள்ளைகளை பராமரிப்பதில் பங்குகொள்ளுங்கள்.

நன்றி.

தொடர்புகளுக்கு : தமிழ் மாணவர் அமைப்பு - ஜெர்மனி

TAMIL STUDENTS ORGANIZATION - GERMANY

IMMENBERG - 7

4790 PADERBORN

PHONE and FAX - 0525167482



படிப்பகம்

www.padippakam.com


# NUCREATION

HONG KONG TORONTO COPENHEGEN FRANKFURT

திருமண வைபவங்களுக்குத்
தேவையான சகல வித பட்டுச் சேலைகள்
ஜப்பான் சேலைகள், பஞ்சாபி, வேட்டி
ஆகியவற்றுடன்
குழந்தைகளின் ரெடிமேட் உடுப்புக்களுக்கு
எம்மை நாடுங்கள்.

NUCREATION

Tel: 069/25 26 67
Fax: 069/25 00 29

Kaiser Strasse 62
6000 FRANKFURT/ Main
GERMANY




படிப்பகம்

www.padippakam.com

உட்பட யாவரும் வந்து துளசியின் வரலாறு முழுவதையும் அறிந்தனர். துளசியும் ஒன்றையும் விடாது கூறியதோடு தனது சகோதரிக்கு என்ன நடந்ததோ! என்று விம்மி விம்மி அழத் தொடங்க சத்தியன் இடையில் குறுக்கிட்டு, ''தங்கச்சி! ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நாங்கள் எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துத் தருவோம்'' என்று கூறி யாவரையும் உறங்கும்படி கூறிவிட்டு துளசியை பாட்டியின் அறைக்கு அனுப்பிவிட்டு வெளி விறாந்தையில் அனைவரும் தூங்கினர்.



# யார் வள்ளல்?

கிண்டி. அஸ்வபிரியர்கள் கும்பல் கும்பலாய் மரத்தடிகளில் கலைந்திருந்தார்கள். ஒருவித எண்ணெய்க் காரலோடு பஜ்ஜி, வடை, சுண்டல் சுறுசுறுப்பாக விற்பனையாகிக் கொண்டிருந்தன.

சத்யன் உற்சாகமாக இருந்தான். அவனது சட்டைப் பையில் ஐந்து நூறு ரூபாய்த் தாள்கள் இருந்தன. சில நண்பர்களுடன் சிண்டிகேட் ஆடியதில் அவன் பங்குக்குத் தேறிய பணம்.

வீடு திரும்ப வேண்டும். பஸ் இன்னும் வரவில்லை. பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் வேளையில் ஏதாவது சாப்பிடலாமே என்று தோன்றியது

நான்கு பஜ்ஜிகள் வாங்கிக் கொண்டான்.

''அய்யா'' - எதிரில் கையேந்திய சிறுமி. சப்பிப் போட்ட பனம்பழமாக தலை. மெல்லிய உருவம். வயிற்றைத் தட்டிக்காட்டிக் கெஞ்சினாள்.

இதுவே இன்னொரு நேரமாக இருந்தால், 'போ.. போ..' என்று விரட்டியிருப்பான். இல்லையென்றால் கண்ணும் காணாததுபோல் இருப்பான்

இன்று ஐந்நூறு ரூபாய் தட்டியிருக்கிறானே!

கையில் இருந்த பஜ்ஜிகளில் இரண்டை தோரணையாக எடுத்துக் கொடுத்தான்

முகம் மலர்ந்த சிறுமி அதைக் கடித்துத் தின்றாள்.

சத்யனுக்கு மகிழ்ச்சி 'தன்னைக் கொடை வள்ளலாகவும். அந்தச் செயலால் தனக்குப் பெரும் புண்ணியம் கிடைக்கும் என்றும் நம்பினான்.

சிறுமி இரண்டாவது பஜ்ஜியை வாயில் வைத்த சமயம், ஒரு நாய்க்குட்டி எலும்பும் தோலுமாய் அவள் எதிரில் நின்று வாலாட்டியது.

மறுகணம், தன் கையில் இருந்த முழு பஜ்ஜியையும் அந்த நாய்க்கு அன்புடன் போட்டாள் அந்தச் சிறுமி.

சத்யனுக்குச் சுரீரென்றது. நிச்சயம் பஜ்ஜி தின்ற காரமல்ல.

— ராதா



படிப்பகம்

www.padippakam.com



சத்தியன் காலையில் துளசியை வீட்டிற்கு அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்து கொண்டிருந்தான். சென்றியில் இருந்த ரகுமான் அவசரமாக வந்தான். அவன் வருகையில் ஏதோ அவசர செய்தி இருப்பதை உணர்ந்து எல்லோரும் அவனை நோக்கினார்கள். அவன் சத்தியனை நோக்கி ''நேற்று இரவு துளசியை ஏற்றிவந்த கொமாண்டோவின் மரணம் இராணுவத்தினருக்கு மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் இராணுவத்தின் கெடுபிடி அதிகரித்துள்ளது. 24மணி நேர ஊரடங்குச்சட்டம் அமுலாக்கியுள்ளார்கள். ஆகவே இப்போது வெளியே போவது அவ்வளவு நல்லதல்ல. அதிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் துளசியின் வீட்டிற்குப்போவது அவ்வளவு சுலபமில்லை'' என்றான். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த துளசியின் கண்கள் கலங்கின. இதை அவதானித்த கிழவி ''ஏனடி பிள்ளை நீ பயப்படுகிறாய், உனக்கு எந்தக் கெடுதலும் இங்கு நிகழாது''



படிப்பகம்

www.padippakam.com

என்றாள். துளசி குழந்தைபோல் அழுதவண்ணம் "நான் இங்கு வந்து ஒரு மணி நேரத்திற்குள்ளேயே முற்றிலும் உணர்ந்துகொண்டேன். எனது உயிருக்கும் பெண்மைக்கும் எந்தத்தீங்கும் இங்கு வராது, என்று என்னால் புரிய முடிந்தது. ஆனால் எனது முழுக்கவலையும் எனது அக்காவும் என் தாய் தந்தையும் என்ன பாடுபடுகிறார்களோ என்பதுதான்" என்று கூறினாள். சத்தியன் குறுக்கிட்டு "தங்கையே நடந்து முடிந்ததைச் சிந்திக்காமல் நடக்கப்போவதையும் அதை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியும்தான் நாங்கள் சிந்தித்து அதற்கு ஏற்ற திட்டங்களை ஊகிக்க வேண்டும். நீ கவலைப்படாதே நிலைமை சரியாக வரும்போது உன்னை உன் வீட்டிற்கு அனுப்பிவைக்கிறேன்." என்று கூறிவிட்டு எங்கோ போக ஆயத்தங்களைச் செய்தான். பின் துளசியருகில் வந்து "இது அடர்ந்தகாடு. கண்டபடி வெளியில் திரியாதே! பாட்டியுடன் இருந்துகொள்." என்று கூறிவிட்டு ஏனைய நண்பர்களுடன் ஆயுதங்கள் தாங்கிய உடையணிந்து கம்பீரமாகப் புறப்பட்டான். துளசிக்கு எல்லாமே புதியவையாக இருந்தது. யோசித்தவாறு அடுப்பு அறைக்குள் கிழவிக்கு உதவச் சென்றாள். அங்கே கிழவி துளசி உள்ளே வருவதை விரும்பாதவள் போல் "வெளிவிறாந் தையில் போய் இரு" என்று கூறிவிட்டு அடுப்பறைக்கதவை அவசரமாகச் சாத்திக் கொண்டாள். முகத்தில் அடிப்பது போன்று கிழவி செய்த இந்த வேலையைத் துளசி சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. பேசாமல் போய் விறாந்தையில் மௌனமாக இருந்தாள். கிழவி சிறிது நேரத்தின் பின் "குடிக்க ஏதும் வேண்டுமா?" என்று கேட்டாள். துளசி கேட்டும் கேட்காதவள் போல் இருந்துவிட்டாள். கிழவி மறுபடியும் "ஏனடி பிள்ளை உனக்குக்கேட்கவில்லையே குடிக்கத் தேனீர் தரவா?" என்று கேட்க "வேண்டாம்" என்று வெறுப்பாகக்கூறினாள் துளசி. துளசியின் பதிலிலிருந்து அவளது கோபத்தைப் புரிந்துகொண்ட கிழவி "எடி பிள்ளை, உன்னை அடுப்படிக்கு வர விடாமல் மறித்ததன் நோக்கம்........" என்று இழுவலாகக் கூறினாள். "நீ பிராமண வம்சம் என்றதை நேற்று இராத்திரி உனது கதையிலிருந்து புரிந்துகொண்டேன். நான் இவர்களுக்கு மீன் சமைத்துக்கொண்டிருப்பதை நீ கண்டுவிட்டால் நீ சாப்பிடும்போது அருவருத்துக்கொண்டு சாப்பிடுவாய்" என்று கூறிக்கொண்டு தேனீரைக்கொடுத்தாள். துளசி கிழவி மீது கோபித்ததை எண்ணி மனம் வருந்தினாள். பின் கிழவியுடன் ஏதோ பல நாட்கள் பழகிவிட்டவள் போல "ஆச்சி நீங்கள் எப்படி இங்கே இவர்களுடன்.......?" என்றாள். கிழவி பெருமூச்சுடன் "அது பெரிய கதை" என்றாள். துளசி "உங்களுக்கு மனக்கஷ்டமென்றால் சொல்லவேண்டாம்" என்றாள்." பரவாயில்லை" என்றவாறு ஆரம்பித்தாள் கிழவி. "மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த நான் எனது மகனுடன் தான் வசித்துவந்தேன். மகனுக்கு இரண்டு குழந்தைகள். ஒரு மகள். அவளுக்கு 15 வயது. மகன் ஒருவன் அவனுக்கு 18 வயது. அவன் 2 வருடங்களுக்கு முன் எங்கோ வெளிநாட்டிற்குச் சென்றவன், போன புதிதில் ஒழுங்காகக் கடிதம் போட்டான். பின் அதுவும் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஒருநாள் மாலை நானும் எனது மகனும் அவனது மனைவியும் பிள்ளையும் வெளி விறாந்தையிலிருந்து மகனுடைய தையல் கடைக்குரிய சிறிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தோம். ''அது என்ன வேலை ஆச்சி?'' என்றாள் துளசி. ''பொத்தான் தைப்பதும், நூல் ஓடுவதும் இப்படி சிறு வேலைகளைச் செய்வது வழக்கம். அப்போது இராணுவத்தினர் வீட்டுக்குள் வந்தனர். அரைகுறைத்தமிழில் எனது மகனை வெளியே வரும்படி அழைத்துச்சென்றனர். நாங்கள் எல்லோருமே நன்கு பயந்து மனதிற்குள் அல்லாவை வேண்டிக்கொண்டோம். சிறிது நேரத்தின் பின் ஒரு பாசலுடன் மகன் திரும்பிவந்தான். பதட்டத்துடன் என்னவென்று வினாவினோம். ''ஒன்றுமில்லை, இராணுவத்தினர் எமது தமிழினத்தைக் காப்பதற்கு இயங்கிவரும் புரட்சிவாதிகளின் மேல் ஏதோ பழியைச் சுமத்தும் நோக்குடன் அவர்கள் அணியும் ஆடைபோல் பத்து உடுப்புக்களை இரண்டு நாட்களுக்குள் தைத்துத்தரவேண்டுமென்றும் இதைப்பற்றி யாருக்கும் சொல்லக்கூடாது என்றும் கட்டளையிட்டுள்ளனர். இப்போ என்ன செய்வதென்று தெரியவில்லை'' என்றான். உடனே எனது மருமகள் ''பேசாமல் தைச்சுக் கொடுங்கோ அல்லது எல்லோர்க்கும் இந்த மோட்டு இராணுவத்தால் ஆபத்து.'' என்றாள். நானும் ''தம்பி அதுதான் சரி'' என்பதுபோல் தலையை அசைத்தேன். அவன் ஒன்றுமே பேசாது பானையில் இருந்த தண்ணீரை மடமடவென்று குடித்தான். பின் வாங்கில் சாய்ந்து கொண்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கினான். எல்லோரும் ஆங்காங்கே மூலையிலிருந்து கடுமையாகச் சிந்திக்கலானோம். ஒரு முடிவிற்கு வந்தவன் போல் என்னைத் தன் மனைவியையும் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு காத்தான் குடியில் இருக்கும் எனது மற்ற மகனிடம் போயிருக்கும்படி கூறினான். ''அப்படியானால் நீ என்ன செய்யப்போகிறாய்?'' என்றேன். ''என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றான்.'' அவன் மனைவி ''இல்லை நான் உங்களை விட்டுப்போகமாட்டேன்'' என்றாள். ''அல்லா! அல்லா!! உங்களுக்கு என் நிலை புரியவில்லையா? இதைச் செய்தால் தமிழினத்தின் துரோகியாவேன். செய்யாவிட்டால் இராணுவத்திடம் மாட்டிக்கொள்வேன். ஆகவே நீங்கள் அனைவரும் போங்கள். நான் எப்படியும் நாளைக்கு அங்கு வந்து விடுகிறேன். கடைப்பொறுப்புக்களை நாணாவிடம் ஒப்படைத்துவிட்டு வருகிறேன்.'' என்றுகூறி எல்லோரையும் அவசரமாக வெளிக்கிடச்செய்தான். அவன் எவ்வளவு கூறியும் அவன் மனைவி கேட்கவில்லை. ''நான் மட்டும் உங்களுடன் வருகிறேன்'' என்று பிடிவாதமாக நின்றுவிட்டாள். நானும் பேத்தியுமாக காத்தான்குடி சென்றுவிட்டோம்.''

''யாரையும் டா, டி போட்டுப் பேசக்கூடாது, என்ன?''

''சரி டாடி!''

— *சீர்காழி விபா*





படிப்பகம்

www.padippakam.com

இதை உருக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்த துளசிக்கு திடீரெனப் பல குரல்கள் ஒன்றுசேர்ந்து கத்துவது போன்ற சத்தம் மெதுவாகக் கேட்டது. ''இது அடர்ந்த காடு என்றார்களே இது என்ன சத்தம்?'' என்று சிந்தித்தவாறு ''ஆச்சி! ஏதோ ஒரு சத்தம் வருகிறதே அது என்ன?'' என்று கேட்டாள். கிழவி திண்ணையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ''அது பெண்கள் பயிற்சிமுகாமிலிருந்து வருகிறது என்ற வண்ணம்'' அடடே! உனக்குக்கதை சொன்னதில் நேரம் பறந்துவிட்டது. பிள்ளைகள் வரும் நேரமாச்சுது'' என்றவண்ணம் திரும்பவும் அடுப்பறைக்குள் ஓடிவிடுகிறாள். துளசி கிழவியைப் பின் தொடர்ந்து சென்று தானும் சமையலுக்கு உதவினாள். ''பின் ஆச்சி, உங்கள் மகன் பிள்ளைகளுடன் காத்தான்குடிக்கு வந்தாரா? '' என்று கேட்டாள். பெரு மூச்சு விட்டவாறு மனம் வருந்தி ''அங்கு என்ன நடந்ததோ, அந்த அல்லாவிற்குத்தான் தெரியும். என் மகனையும் மருமகளையும் வீட்டுக்குள் விட்டுப்பூட்டி அவர்கள் மீது பெற்றோல் ஊற்றிக் கொழுத்தப்பட்டதாகச் செய்தி வந்தது. இந்தச் செய்தி கிடைத்து மூன்றாவது நாள் எங்கள் பள்ளிவாசலில் பலரைப் புரட்சிவாதிகள் கொலை செய்ததாக அந்த அப்பாவிகளுக்கு எதிராக ஒரு கதை பரவலாகியது. ''ஏதோ சதித்திட்டத்திற்கே இந்த உடுப்பைத் தைக்கும்படி கேட்கிறார்கள்'' என்று அன்று என் மகன் கூறியதன் அர்த்தம் இன்றுதான் புரிந்தது. எனது பேத்தி இவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ளமுடியாமல் மௌனம் சாதித்தவண்ணம் என் மகனைப் போலவே அங்குமிங்குமாக நடந்து திரிந்தாள். ஒரு கிழமையாக அவள் ஒருவருடனும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள். திடீரென ஒரு நாள் அவளைக்காணவில்லை. சிறிய கடிதமொன்று கதவில் சொருகி விடப்பட்டிருந்தது. அதில் ''என்னைத்தேட வேண்டாம் நான் பாதுகாப்பான இடத்திற்குச் செல்கிறேன்'' என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது. என் மகனின் பிரிவைக்காட்டிலும் பேத்தியின் பிரிவு என்னை மிகவும் வருத்தியது. அவளை எங்கெல்லாமோ தேடமுற்பட்டேன். வீட்டுக்கும் வராமல் தெருத்தெருவாய் அலைந்தேன். ஒரு நாள் மயக்கமுற்று தெருவில் விழுந்துவிட்டேன். அந்தப் பிராந்தியத்திற்குப் பொறுப்பாக உள்ள ஒரு புரட்சிவாதி தண்ணீர் தெளித்து அன்போடு ''உங்கள் வீடு எங்கே இருக்கிறது சொல்லுங்கள்'' என்றான். கண்களை விழித்துப் பார்த்தபோது இராணுவம் எனது மகனிடம் கொடுத்த அதே துணியைப் போல உடை அணிந்திருந்தான். அவனிடம் என் மகனுக்கு நடந்த கதையிலிருந்து எனது பேத்தி என்னை விட்டுப் போனவரைக்கும் கூறினேன். அவன் ஆதரவோடு ''தாயே உனது பேத்தியின் பெயரென்ன?'' என்றான். கூறியதும் அவனது உடுப்பில் பொருத்தப்பட்டிருந்த ஒரு கருவியினால் சற்றுத் தூரத்திற்குச் சென்று ஏதோ கதைத்தான். பின் என்னைப் பார்த்து ''நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். உங்கள் பேத்தி பாதுகாப்பாக இருக்கிறாள். நான் உங்களை உங்கள் வீட்டில் விட்டுவிடுகிறேன்'' என்றான். நான் மறுத்துவிட்டேன். ஒரு முறையாவது எனது பேத்தியை நான் பார்க்க வேண்டுமென்று அடம் பிடித்தேன். நான் மிகவும் வற்புறுத்தியதனால்



படிப்பகம்

www.padippakam.com



# முத்துமுத்தாய் வைரமுத்து

'ரசிகர்கள் உங்களிடம் ஆட்டோகிராப் கேட்கிற போது, அவர்களுக்கு நீங்கள் எழுதித் தரும் வாசகங்கள் என்னென்ன?' என்று கவியரசு வைரமுத்துவிடம் கேட்டதற்கு, புறப்படும் அவசரத்தில் இருந்த அவர், காரில் உட்கார்ந்தபடியே 'மளமள'வென்று எழுதிக் கொடுத்த வரிகள் இவை:






படிப்பகம்

www.padippakam.com

என்னைப் பேத்தியிருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு போனபின்புதான் அவள் புரட்சிவாதிகளுடன் சேர்ந்துவிட்டாள் என்பது எனக்குப் புரிந்தது. நான் அப்போது இருந்த நிலையில் என்னையும் சேர்க்கும்படி ஆவேசத்துடன் கேட்டேன். எனது வார்த்தைகளைக்கேட்ட அந்தப் பகுதிப் பொறுப்பாளர் என்னை வயது போன ஒருத்தி என்றுகூட உதாசீனம் செய்யாது '' தாயே எமது மண்ணை மீட்பதற்கு சாதி, மதம், ஆண், பெண், வயதெல்லை என்று எந்தப் பாகுபாடும் எம்மிடத்தில் இல்லை. அவரவர் திறமைக்கு ஏற்ப கடமைகளைப் பிரித்துக் கொடுத்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து எமது மண்ணை மீட்பதுதான் எமது தலையாய கடமை. ஆனால் தாயே! எங்களுடன் சேர்ந்துகொள்வதற்கு மன உறுதியும் எந்தவொரு ஆசாபாசங்களுக்கும் மனச்சஞ்சலங்களுக்கும் இடம் கொடாத மனப்பான்மையும் இருக்கவேண்டும். அத்துடன் சிலவேளை உயிரைக்கூடத் தியாகம் பண்ணவேண்டி வந்தால் அதையும் செய்யத்தயாராக இருக்கவேண்டும்'' என்றான். அவன் சொன்னவற்றையெல்லாம் கேட்ட எனக்கு எங்கிருந்து வீர உணர்வு வந்ததோ தெரியவில்லை. சற்றுக் கோபத்துடன் அவனைக்கடிந்தேன். ''ஏண்டா தம்பி! இளம் குருத்துக்கள் எல்லாம் தங்களைத்தாங்களே தியாகம் செய்துகொண்டிருக்கும் இந்த வேளையில் காவோலை எனக்கு மட்டுமென்ன உயிர்மீது அவ்வளவு ஆசை? எனக்கும் சந்தர்ப்பம் கொடு. நானும் என்னால் எந்த விதத்தில் உதவமுடியுமோ அந்த விதத்தில் உதவுகிறேன். கடைசி உங்களுக்குச் சமைத்துப் போடும் வேலையாவது செய்கிறேன்'' என்றேன். அவனும் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, தனது தலைமைப் பீடத்துடன் ஏதோ கதைத்துவிட்டு '' ஆச்சி உங்களையும் எங்களுடன் சேர்ப்பதில் பெருமை அடைகிறோம். ஆனால் நீங்கள் உங்கள் பேத்தி இருக்கும் இடத்தில் இருக்கமுடியாது '' என்றான். '' தம்பி, என்னை இந்த அளவிற்கு மாற்றியதே எனது பேத்திதானே. அவள் எமது மண்ணுக்குத் தன்னை அர்ப்பணிக்கத் துணிந்துவிட்டபின் எனக்கு வேறென்ன வேண்டும். என்னை எங்கு பயன்படுத்தவேண்டுமோ அங்கு நான் போகத்தயார். ஆனால் நான் இதில் சேர்ந்த விடயம் எனது பேத்திக்குத் தெரியக்கூடாது'' என்று கேட்டுக் கொண்டேன். ''ஊம் ...... என்ன செய்வது இங்கு வந்து இரண்டு வருடமாகிறது. இன்னமும் அடுப்படியில்தான் இருக்கிறேன். எனது பேத்தி இப்போ ஒரு பிராந்தியத்தில் பெண் போராளிகளின் தலைவியாக இருக்கிறாள்'' என்று பேத்தியுடன் போட்டி போடுவது போல ஒரு பெருமூச்சை எறிந்தாள். துளசிக்கு கிழவியின் சோகக்கதையைக் கேட்டதிலிருந்து தனது கதை அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. ஒன்றுமே பேசாது ஆழ்ந்த யோசனையில் இருந்தாள் துளசி. கிழவி ''என்னடி பிள்ளை! கடுமையாக யோசிக்கிறாய்?'' என்றதும் ''ஒன்றும் இல்லை ஆச்சி'' என்று மறந்தது நினைவிற்கு வந்தவளாக ''ஆச்சி அந்தப் பெண்கள் பயிற்சி முகாமிற்குப் போகலாமா?'' என்றாள்.



படிப்பகம்

www.padippakam.com

ஐயர் கோயிலுக்கு அவசரமாகப் போகும்போது கறுப்புப் பூனையொன்று திடு கூறாகக் குறுக்கே சென்றது. அது ஐயருக்கு சற்று மனச் சஞ்சலத்தைக் கொடுத்தது. பின் கோயிலுக்குச் சென்று கதவைத் திறந்தபோது விபூதி, குங்குமம் எல்லாம் நிலத்தில் சிந்திக் கிடந்தன. இவற்றையெல்லாம் கண்டதும் ஐயர் ஏதோ விபரீதம் நடந்து விட்டதெனத் தன்னை அறியாமலே தலையில் அடித்து அழத்தொடங்கிவிட்டார். ஆமாம். ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்திருந்த ஐயர் யன்னல் கதவைப் பூட்டாமல் சென்றதால்தான் அந்த வழியே வந்த பூனை யொன்று இப்படி எல்லாவற்றையும் தட்டிக் கொட்டிவிட்டது. இதை ஐயர் தனது மகள் துளசிக்கு ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதாக நினைத்துக்கொண்டார். ஐயரின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. மல்லிகா மெதுவாகக் கதவைத் திறந்தாள். அங்கே நடுத்தர வயதுடைய ஒருவர் நின்றுகொண்டிருந்தார். பார்ப்பதற்கு பெரிய உத்தியோகத்தவர் போலக் காட்சியளித்தார். ''வணக்கம் என்னைத் தெரியுமா?'' என்ற வண்ணம் உள்ளே வந்து '' நீ இராணுவ முகாமில் மயக்க முற்ற நிலையில் இருக்கும்போது நான் உன்னைப் பார்த்தேன். உனது விலாசத்தைச் சாரதியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். உன்னை உன் வியாதி காப்பாற்றிவிட்டது. ஆனால் பாவம் உன் தங்கை அநியாயமாக அந்தக் கொடிய அரக்கர்களால்.... கொல்லப்பட்டுவிட்டாள்'' என்றதும் மல்லிகா, ''ஐயோ!... அப்பா!... என்று குளறத்தொடங்கினாள். வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த ஐயர் பதைத்துப்போய் வீட்டுக்கு ஓடி வந்தார். அங்கே நின்றவரிடமெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ''நீர் யார் உமக்கு இதெல்லாம் எப்படித்தெரியும்?'' என்றார். அவர் தானொரு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பாளனென்றும், தனது பெயர் ஸ்ரீதரன் என்றும், தான் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் ஒரு தமிழன் என்ற காரணத்தால் இரு தரப்பினரதும் வன் சொற்களுக்கு ஆளாகி மிருதங்கம் போல இருக்கிறேன் என்றும் மனம் சலித்துக் கூறினார். பின் இவர்களுக்கு ஆறுதல் கூறி ''நீங்கள் அனைவரும் இந்த இடங்களில் இருக்காது எங்காவது இடத்தை மாற்றிக்கொள்வதுதான்



## ஏன் சிரித்தாய் நீ?

உனது சிரிப்பில்
உலகையே மறந்ததினால்
உறக்கமின்றி தவிக்கிறேன் –
ஏன் சிரித்தாய் நீ?
என் உறக்கத்தைக்
கலைத்திடவோ?!

— ஜெர்மனி யசோ.



படிப்பகம்

www.padippakam.com

சிறந்தது. இராணுவம் இவ்விடத்தில் முகாம் அமைக்கத்திட்டமிட்டுள்ளது. ஆகவே கூடிய விரைவில் நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். நான் இங்கு வந்தது இராணுவத்திற்குத் தெரிந்தால் அது வேறு பிரச்சனையாகிவிடும்'' என்று கூறி வெளியே சென்றார். வீட்டில் அழுகுரல் கேட்ட கோபால் ஓட்டத்தில் ஐயர் வீட்டிற்கு வந்தான். ''இது என்ன கொடுமை! ஒரு குடும்பத்தை மட்டும் இறைவன் இப்படிச் சோதிக்கிறானே'' என்று மனம் வருந்திக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அயலவர்கள் எல்லோரும் கூடிவிட்டனர். அங்கே துளசியின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. ஐயர் ''இது எனக்கு காலையில் நடைபெற்ற அபசகுணத்தின் போதே தெரியும்'' என்று சொல்லித் தனது தலையில் அடித்து அழுதார். அந்த அயலே சோகத்தில் மூழ்கியது. அதேசமயம் ஆகாயவிமானங்கள் அங்குமிங்குமாகப் பேரிரைச்சலுடன் பறந்து வானத்தை வட்டமிட்டவண்ணம் இருந்தன. ஏதோ விபரீதம் ஏற்படப் போவதாக எண்ணி எல்லோரும் ஏற்கனவே புரட்சிவாதிகளின் கட்டளைப்படி ஏற்படுத்தப்பட்ட பதுங்கு குழிகளுக்கு அருகில் நின்று வானத்தை மிரண்டு பார்த்தவண்ணம் இருந்தனர் அப்பாவி மக்கள். கோழிக்குஞ்சுகள் கருடனைக் கண்டதும் தமது உயிரைப் பாதுகாப்பதற்காக பற்றைக்குள் புகுந்து கொள்வது போல இவர்களும் அண்ணார்ந்து பார்த்தவண்ணம் இறைவனை வேண்டி நின்றனர். ஆம். கொடிய இராணுவம் மூர்க்கத்தனமாகக் குண்டுமாரிகளைப் பொழியத்தொடங்கின. எல்லோரும் அங்கலாய்த்தவண்ணம் பதுங்கு குழிக்குள் புகுந்து கொண்டனர். ஐயர் குடும்பம் மட்டும் ஒன்றுக்கும் கலங்காதவர்கள் போல அப்படியே வீட்டுக்குள் இருந்தனர். இதைக் கவனித்த கோபால் அவர்களைப் பலவந்தப் படுத்திக் கையைப் பிடித்து இழுத்துச் சென்று அவர்களின் வீட்டிலிருந்த பதுங்கு

'என்னை மறந்து விடு'
என்றவளே...
நானும் மறந்து விட்டேன்!
என்னுள் மல்லிகையாய்
மணம் பரப்பும் உன்
நினைவுகளை அல்ல...
நீ சொன்ன அந்த வார்த்தைகளை!!

தி. ராஜு.





படிப்பகம்

குழியினுள் இட்டுச் சென்றான். இறுதியாக உணர்வற்றிருந்த தாயாரையும் தூக்கி அப்பதுங்கு குழியில் இட்டு, அந்தச் சிறிய பதுங்கு குழியில் தானும் புகுந்து அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்காமல் தனது வீட்டிற்கு ஓடினான். இராணுவத்தினரின் அட்டகாசம் அரை மணி நேரமாகத் தொடர்ந்தது. அந்த அயலே உருவம் தெரியாத அளவிற்குச் சிதைந்துவிட்டது. விமானங்கள் அவ்விடத்தை விட்டகன்றதும் எல்லோரும் படிப்படியாக வெளியேறினர். இத்தாக்குதலினால் பலரது வீடுகள் பாதிக்கப்பட்டன. ஐயரின் வீட்டில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் கோவில் தரை மட்டமாக்கப்பட்டிருந்தது. ஐயரும் மல்லிகாவும் தாயின் கையைப் பிடித்தவண்ணம் மறுபடியும் வீடு வந்தனர். துளசியின் நினைவு அவர்களை வாட்டியது. ஐயர் தான் வணங்கிய தெய்வம் தன்னைக்கைவிட்டுவிட்டதாக அழுது திட்டினார். தற்செயலாக மல்லிகா முற்றத்தில் ஓர் உருவம் இரத்தவெள்ளத்தில் கிடப்பதைக் கண்டுவிட்டு ''அப்பா அங்கே!'' என்று சுட்டிக்காட்டினாள். பதட்டத்துடன் அருகில் சென்ற ஐயர் கலங்கிவிட்டார்.

ஐயர் இரத்தவெள்ளத்திலிருந்த உடம்பைப் புரட்டிப்பார்த்தார். அங்கே கோபால் குற்றுயிருடன் முனகிய வண்ணம் இருந்தான். அயலவர்கள் உதவியுடன் கோபால் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டான். தனது கஷ்டங்க்களிலெல்லாம் பங்கெடுத்துதவிய கோபாலிற்கு இப்படி நேர்ந்ததை நினைத்து மனம் வருந்தினார். மல்லிகாவும் ''எங்களால்த்தானே கோபாலுக்கு இப்படிநேர்ந்தது'' என்று வேதனைப்பட்டாள். மறுபடியும் விமானங்கள் வரும் சத்தம் கேட்டது. அயல் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டது. மறுபடியும் பதுங்குகுழிகளில் மக்கள் புகுந்துகொண்டனர். ஐயர் மல்லிகாவைப் பதுங்குகுழியினுள்ப் போகும்படி கூறிவிட்டு எதிலும் அக்கறையில்லாதவர் போலத் திண்ணயில் அமர்ந்திருந்தார். மல்லிகா கேட்டும் கேளாதவள் போலிருந்தாள். ஐயர் மறுபடியும் கூறினார் ''நடப்பது நடக்கட்டும். எல்லைகடந்த சோதனைகளை ஆண்டவன் தரும் போது ஓடி ஒழித்தால் மட்டும் விட்டுவிடுவானா?''என்றார். ஐயர் ''மகளே! துன்பம் வரும்போதுதான் நாங்கள் திடமாகவும் உறுதியாகவும் இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும்''என்றுகூறி மல்லிகாவை அவசரமாகப் பதுங்கு குழிக்குள் அழைத்துச்சென்றார். அதற்கிடையில் மின்னல்வேகத்தில் பல இடங்களிலும் குண்டுகள் வீசப்பட்டதுடன் ஐயர் வீட்டின்மீதும் வீசப்பட்டன. இருவரும் கத்தியவாறு திரும்பவும் வீட்டுக்குள் ஓடினார்கள். அங்கே தாயின் தலையில் அடிபட்டதால் தரையில் மயக்கமுற்றுக்கிடந்தாள். இம்முறை அயலில் பலவீடுகள் தீக்கிரையாகியதுடன் பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டது. அக்கிராமம் மிகவும் பரிதாபமாகத் தோற்றமளித்தது. மல்லிகாவும் ஐயரும் கோபாலிருக்கும் அதே மருத்துவமனைக்குத் தூக்கிச்சென்றனர். இரண்டு நாட்களின் பின் தாய்க்கு அறிவுதிரும்பியது. ''கெட்ட காலத்திலும் ஒரு நல்லகாலம்'' என்பதுபோல இந்தத்தாக்குதலினால் தாய்க்குச் சுய நினைவு மீண்டும் ஏற்பட்டது. தனக்குமுன்னே மல்லிகா நிற்பதைக் கண்ட அவள்

www.padippakam.com

மல்லிகா! உன்னை இராணுவம் கொண்டுபோகவில்லையா? துளசி எங்கே?'' என்று வினாவினாள்.

ஐயர் முந்திக்கொண்டு ''துளசி வீட்டில் இருக்கிறாள்'' என்றார். தனக்கு எப்படித் தலையில் காயம் ஏற்பட்டதென்று விசாரிக்கத்தொடங்கினாள். எல்லாவற்றையும் மறைத்து ஒருவாறு சமாளித்துவிட்டார் ஐயர். பின் மல்லிகாவையும் அழைத்துக் கொண்டு ''அடுத்த அறையில் எங்கள் வீட்டுக்கு அருகில் இருக்கும் கோபால் காயமுற்றிருக்கிறான். அவனையும் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போய் நாளை காலையில் வருகிறேன்'' என்று கூற ''அதற்கு ஏன் மல்லிகாவையும் கூட்டிக்கொண்டு போகிறீர்கள்'' என்று தடுத்தாள். ''ஆம் ஐயரம்மா இன்னமும் பழைய நிலையில்தான் இருக்கிறா. இத்தனை நாட்களும் வீசிய சூறாவழியில் சிக்குண்ட எமக்கு கோபால் எப்படியெல்லாம் உதவினான் என்பது இவளுக்குத்தெரியாதுதானே'' இருவரும் நினைத்துக்கொண்டனர். ஐயர் ''மல்லிகா இங்கே நிற்கட்டும்'' என்றுகூறி மல்லிகாவை உற்றுப்பார்த்தார். மல்லிகா தகப்பனின் எண்ணத்தை நன்கு புரிந்தவளாகத் தலையை அசைத்தாள். ஐயர் கோபாலின் அறைக்குள் நுழைந்தார். கோபாலுக்கு அறிவு திரும்பவில்லை டாக்டரிடம் விசாரித்தார். அவர் கவலையுடன் ''அரசாங்கம் பொருளாதாரத் தடையை மட்டும் செய்யவில்லை. மருத்துவத்திற்கு வேண்டிய பொருட்கள், மருந்துகள் எல்லாவற்றையுமே தடைசெய்துவிட்டார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் உதவிகோரியுள்ளேன். அவர்களிடமிருந்து ஏதும் உதவிகிட்டினால் இந்த இளைஞனைக் காப்பாற்றமுடியும். இனி எல்லாம் இறைவன் அருள்தான்'' என்றவண்ணம் அவசரமாக வேறு நோயாளிகளைப் பார்வையிடச்சென்றார். ஐயர் மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு மல்லிகாவுடன் வீட்டிற்குச்சென்றார். வழியில் பல வீடுகளில் அழுகுரல் கேட்டது. தமிழினத்திற்கு ஏற்பட்ட அவல நிலையை எண்ணியவாறு தன் மகள் துளசியின் மரணத்திற்கு ஈமச்சடங்குகள் செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்து குல வழக்கபடி ஆத்மா சாந்தியடையச்செய்யும் சாந்திகளைச் செய்ய ஏற்பாடுகள் செய்தார். வீட்டிலுடைந்த பகுதிகளை ஒதுக்கி சகல காரியங்களையும் மீனாட்சியம்மாள் வீட்டுக்கு வருமுன் செய்துமுடித்தார்.

மறுநாள் மனைவியைப்பார்த்துவிட்டுக் கோபாலிடம் சென்றார். அங்கே ஆண்டவன் கருணையாலும் செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியாலும் கோபால் உயிர்பிழைத்துக் கொண்டான். ஆனால் அவனது இடதுகை அகற்றப்பட்டுவிட்டது. அவன் மயக்கம் தெளிந்து இருந்தான். ஐயரைக்கண்டதும் வணக்கம் கூறி அவரது குடும்பத்தினரதும் அவரதும் சுகத்தை விசாரித்தான். ஐயருக்குக் கண்கலங்கின. இந்த நிலையிலும் கூடத் தன்குடும்பத்தை விசாரிக்கிறானே என்று தனக்குள்ளே நினைத்து மனம் கலங்கினார். ''தம்பி! உனது சுகம் எப்படி? என்று ஆதரவோடு வினாவினார். அதற்கு அவன் தன் கைதான் வலிப்பதாகவும் எப்படியும் ஒருகிழமைக்குள் வீட்டுக்கு



படிப்பகம்

# சிந்தாந்தி பதிப்பகம்

* திருமண கார்ட்டுகள்
* திருமண வாழ்த்து மடல்கள்
* விசிட்டிங் கார்ட்டுகள்
* விளம்பர துண்டுப்பிரசுரங்கள்
* விளம்பர டிசைன்கள்

மற்றும் சகல விதமான அச்சு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:
சேகா ஆட்ஸ் -069/704439.






* சஞ்சிகைகளுக்கான அட்டைப்படங்கள்
* திருமண வாழ்த்து மடல்கள்
* விளம்பர போர்ட்டுகள்
* கோயில் திரைச் சீலைகள்
* உருவப் படங்கள்

மற்றும் சகலவித ஓவிய வேலைகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள் :
தொலைபேசி: 069/ 704439 or 4960969

பிராங்பேர்ட் நகரில் !






கலைஞன் வீடியோ மூவீஸ்

"வாழ்க்கை என்பது போர்க்களமல்ல அழகியதோர் கலைக்கூடம்" சிவா-069/ 45 47 85 சேகர்-ஆட்ஸ்-069/ 70 44 39

www.padippakam.com



அனுப்பிவைபார்களெனவும் நாள்தோறும் மருந்துகட்ட வரவேண்டுமென்றும் கூறினான். ஐயர் தன் மனைவி குணமடைந்த விபரத்தை அவனுக்குக் கூறினார். தன்மனைவியை இன்று வீட்டுக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறி விடைபெற்றார்.

ஐயர் வீட்டையடைந்ததும் அவர்மனைவி வீட்டைப்பார்த்ததும் கலக்கம் அடைந்தாள் துளசி தன்னைப்பார்க்கக்கூட வராததால் கோபத்துடன் ''எங்கே துளசி? அவள் பெரிய மகாராணி என்ற எண்ணமோ என்றவாறு வீட்டுக்குள் சென்றாள். அங்கே அவளது படத்திற்கு மாலையிட்டுக் குத்துவிளக்கு ஏற்றப்படிருந்ததையும் வீட்டின் அமைதியின்மையும் பார்த்து ஓவென்று கதறினாள். ஐயர், அயலில் உள்ள அசம்பாவிதங்களைக் கூறி ஆறுதல் அடையப்பண்ணியபோதும் துயரம் அளவிற்கதிகமாக எழுந்ததால் ஒருவரும் ஆறுதல் அடையமுடியவில்லை. கோபால் கைதுண்டிக்கப்பட்டிருந்த போதிலும் அடிக்கடி அவ்விடம் சென்று அனைவரின் சுகத்தையும் விசாரிப்பதில் தவறியதில்லை.

ஐயர் கோபால் வீட்டிற்கு அடிக்கடி போவதும் அவனுக்கு உணவு கொடுப்பதுமாக இருந்தார். இது மீனாட்சியம்மாளிற்குப் பிடிக்கவில்லை. அதைவிட மல்லிகா கோபாலைப்பற்றி அனுதாபப்பட்டுக் கதைப்பது அறவே பிடிக்கவில்லை. பலதடவைகள் இதைப்பற்றிக் கண்டனம் தெரிவித்தாள் கோபால் வழமைபோல ஐயரின் வீட்டிற்குச் சென்றபோது மீனாட்சி வாசலில் நின்றபடி அவனை உள்ளேவிடாது அவனை முன்பின் தெரியாதவளைப்போல் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டதும் கோபால் விறைத்துப்



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு கடிதம் பேசுகிறது



எம். மாலா

அன்புள்ளவருக்கு,

கடந்த 3 வருடங்களாக தங்கள் மனைவியாக வாழ்ந்த ராதா எழுதியது. காதலித்து கல்யாணம் செய்து கொண்ட நம் வாழ்க்கை, இவ்வளவு சீக்கிரம் முடிந்து விடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு ஆறு மாதங்கள் சந்தோஷமாய் இருந்திருப்பேன். எதையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்காத உங்களால் அடிக்கடி பிரச்சனைகள் உருவாயிற்று. இதை நான் பொருட்படுத்தாமல்தான் இருந்தேன். ஆனால் உங்கள் அம்மா அதை பெரிதாக எடுத்துக் கொண்டு, எல்லோரிடமும் பேச ஆரம்பித்தார்கள். இடையில் குழந்தையில்லாத பிரச்சனை வேறு. மூன்று, நான்கு வருடங்கள் கழித்தெல்லாம் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் இதையும் அலட்சியப் படுத்தினேன். நான் டாக்டரிடம் சென்று செக்கப் செய்ததில், என்னிடம் ஒரு குறையும் இல்லை என்றார்கள். உங்களை டாக்டரிடம் செல்ல யாரும் வற்புறுத்தவில்லை. நான் சொன்னதையும் நீங்கள் ஏற்கவில்லை. முடிவாக, 'சென்றேன்' என்று சொன்னீர்கள். ரிஸல்ட்டையும் வந்து சொல்லவில்லை.

மாதம் முடிந்து நான் வாங்கும் சம்பளத்தை உங்களிடம் தருகிறேன். இடையில் ஒரு அவசரத் தேவை என்றால் உங்களிடம் கேட்க முடியவில்லை. எப்போதும் உங்களைச் சுற்றி அம்மா, தங்கைகள், குழந்தைகள் என்று ஒரே கூட்டம். என்னை விட்டு எவ்வளவு தூரம் விலக முடியுமோ, அவ்வளவு தூரம் விலகினீர்கள். சிறு வயது முதலே யாரிடமும் அதிகம் பழகாததால், இதையெல்லாம் சொல்லி அழுவதற்குக் கூட யாருமில்லை. வாரம் ஒரு முறை என் அம்மா வீட்டுக்குச் செல்வதும், ஆபீஸ் போய் வருவதும்தான் என்னுடைய ஒரே மருந்து. நான் உங்களை திருமணம் செய்து கொண்டதே – என்னைப் புரிந்து நடப்பீர்கள் என்ற ஒரே எண்ணத்தில்தான். மற்றபடி உங்கள் படிப்போ, சம்பளமோ எதுவும் காரணமில்லை! ஏனென்றால், உங்களை விட அதிகம் சம்பளம் வாங்கும் நான், அதை ஒரு பொருட்டாக நினைத்ததே இல்லை. இப்படி ஒரு நரக வாழ்க்கையை என்னால் மேலும் தொடர முடியாது. இக் கடிதத்தை நாளை உங்களிடம் தந்து விட்டு, ஒவ்வொரு வாரமும் செல்வது போல் முடிவாக என் அம்மா வீட்டிற்கே செல்கிறேன்!

குறிப்பு :

உங்களது 'மெடிக்கல் ரிப்போர்ட்'டை சமீபத்தில் பார்த்தேன். அதன் மூலம் என்னை தாயாக்கக் கூடிய சக்தி உங்களுக்கு இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். இருவரும் பேசி முடிவெடுத்து, ஒரு அனாதைக் குழந்தையை தத்தெடுத்து வளர்க்கலாம். ஆனால், நீங்கள் என்னிடம் பேசுவதையே தவிர்க்கும் போது, நான் என்ன செய்ய முடியும்? தயவு செய்து உங்கள் அம்மா பேச்சைக் கேட்டு இன்னொரு கல்யாணம் செய்து கொண்டு, இன்னொரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்கி விட வேண்டாம்.


உங்கள் அன்பு மனைவி ராதா.



படிப்பகம்

போனான். மெதுவாக ''ஐயா இருக்கிறாரா?'' என்று கேட்டதும் ''இங்கு இல்லை இந்தா இதைக் கொண்டுபோய்ச் சாப்பிடு'' என்று கூறி வாழையிலையில் சுற்றிய ஒரு பொட்டலத்தை அருகிலிருந்த மேசைமேல் வேண்டாவெறுப்பாகத் தள்ளிவிட்டாள். தன்னைப் பிச்சைக்காரனை விடக்கேவலமாகக் கணித்து மீனாட்சி செய்த செய்கையை எண்ணி மிகவும் வருத்தமடைந்த கோபால் பொட்டலத்தை அப்படியே விட்டுவிட்டு மெதுவாகச் சென்றான்.

தாய் கோபாலுடன் நடந்துகொண்டவிதம் மல்லிகாவிற்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. தன் தாயுடன் எதிர்த்துக் கதைக்கமுடியாத நிலையில் மௌனமாக நின்றாள். கோபால் அவமானம் தாங்கமுடியாமல் இனிமேலும் இங்கு இருக்கக்கூடாது இருந்தால் மன நிம்மதியாக இருக்கமுடியாது என நினைத்து தனக்குத் தெரிந்த ஒரு நண்பனின் வீட்டிற்குச் சென்றான். ஒருகிழமையாகக் கோபாலைக் காணாத ஐயர் ''இவனுக்கு என்ன நடந்தது! எங்கே போயிருப்பான்!'' என்றெல்லாம் சிந்திக்கலானார். அச்சமயம் ஒலிபெருக்கிமூலம் கிராமத்தில் உள்ள மக்களெல்லோரையும் மூன்று நாட்களுக்கு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது. இது கேட்டதும் ஐயர் ஏதோ பாரிய தாக்குதல் ஏற்படப்போவதை உணர்ந்தார். உடனே தங்களுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு தனது உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று அங்குள்ள கோவில் வேலைகளில் உதவிசெய்தார். தமிழிரின் நிலை மிக மிக மோசமடைவதை நினைந்து மனம்



www.padippakam.com

கலங்கிய ஐயர் தனது மகள் மல்லிகாவிற்கு உடனே திருமணம் செய்து வைக்க முடியுசெய்து தனது இனத்தவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். இறுதியில் திருமணம் நிச்சயமாக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் துளசியின் ஞாபகம் அவர் மனத்தை வாட்டியது. துளசி துடினமும் கலகலப்புமுள்ளவள். அவள் பிரிவு ஐயரை மிகவும் புண்படுத்தியது. தனிமையில் எத்தனையோ முறை அழுவதும் உண்டு.

புரட்சிவாதிகளின் தலைமைப்பீடத்தின் அனுமதியைப் பெற்றபின் ஒருநாள் துளசியைப் பெண்கள் முகாமிற்கு அழைத்துச் சென்றனர். துளசி விறைத்துப் போனாள். இவ்வளவு பெருந்திரளான யுவதிகள் மன ஆர்வத்துடன் மிகவும் கஷ்டமான பயிற்சிகளைச் செய்து கொண்டிருந்தனர். இவ்வளவு சிறிய வயதிலேயே தங்களை நாட்டிற்காக அர்ப்பணித்தவர்களுடன் தன்னை நினைத்துப் பார்த்து வெட்கமடைந்தவளாக வாயடைத்துப்போய் நின்றாள் துளசி. நாட்கள் கிழமைகள் மாதங்களாயின. துளசிக்கு வீட்டுச்சிந்தனை படிப்படியாக விடுபட்டு புரட்சி எண்ணம் உதிக்கத் தொடங்கின. இதற்கிடையில் ஒருநாள் சத்தியன் ''இப்போ ஓரளவு நிலைமை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. இராணுவம் தரைமார்க்கமாகச் சில பகுதிகளுக்கு வாராதவாறு கட்டுப்படுத்தியுள்ளமையால் உன்னை இன்று உனது வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறோம்'' என்றார். அவளிடத்தில் அரும்பிய எண்ணங்கள் தவிடு பொடியாயின.

மீண்டும் தாய் தந்தை சகோதரியின் நினைப்பும் பாசமும் தலைக்கேறியது. தன்னையறியாமலே மலர்ந்த முகத்துடன் புறப்படத்தயாரானாள். இவ்வளவு நாட்களும் அன்புடன் பழகிய பாட்டியைக் கட்டியணைத்து நன்றி ததும்ப முத்தமிட்டாள். பின் அங்கு சகோதரர்போல் பழகிய இளைஞர்களை நன்றியுடன் பார்த்துவிட்டு வாகனத்தில் ஏறிக்கொண்டாள். வாகனத்தில் துளசியுடன் இருபெண் போராளிகளும் இருந்தனர். வாகனம் மிகவும் அடர்ந்த காடுகளுக்கிடையே ஒற்றையடிப்பாதை வழியாகவும் வீதிகள் வழியாகவும் சென்றது. நீண்ட நேரத்தின் பின் துளசியின் கிராமத்துள் வாகனம் நுழைந்தது.



''அங்கு ஏன் கூட்டமாயிருக்கு?''


''நிறைய பேர் இருக்காங்களே''

— குமாரி கங்கா



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

அங்கு தூசி படர்ந்தவண்ணம் பாடசாலை நிர்மூலமாக்கப்பட்டிருந்தது. அக்கிராமமே உருத்தெரியாமல் காட்சியளித்து. துளசியின் மலர்ந்தமுகம் மறுபடியும் வாடத்தொடங்கியது. அவள் வீட்டையடைந்ததும் பதைத்துப்போய் அங்குமிங்கும் ஓடினாள். ''அம்மா! அம்மா!'' என்று குளறினாள். வீடு அல்லோலகல்லோலமாக வெறிச்சோடிப்போய் இருந்தது. அயலிலும் ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. வீடுகளும் உடைந்து காணப்பட்டன. ஏதோ சூறாவளியினால் பாதிக்கப்பட்ட கிராமமாகக் காட்சியளித்தது. செய்வதறியாத நிலையில் தன் தலையை முட்டிக்கொண்டாள். பெண் போராளிகள் துளசியை இறுகப்பிடித்தவண்ணம் ஆறுதல் கூறினார்கள். அவ்வழியே வந்த ஒரு வயோதிபருடன் பேசிய சத்தியன் இதுபற்றி விசாரித்தான். இந்த அயலில் இருந்தவர்கள் என்ன ஆனார்கள் என்று தனக்குத் தெரியாதென்றும் தானும் தனது பேரப்பிள்ளைகளும், அம்பாறையைச்சேர்ந்தவர்களென்றும் அங்கு இராணுவக் காடையர்கள் தனது மகனையும், மருமகளையும் வீட்டுக்குள் புகுந்து கத்தியால் குத்திக் கொடூரமாக கொலை செய்து தன் 16 வயதுடைய மூத்த பேத்தியைக் கடத்திச் சென்றுவிட்டனர். மற்ற இருபேத்திகளுடன் இங்கு ஒரு வீட்டில் இருப்பதாகக் கூறிச் சலிப்படைந்தார். சத்தியன் ''வயலெஸ்'' மூலம் தலைமைப்பீடத்துடன் தொடர்புகொண்டு அக்கிராமத்திற்குப் பொறுப்பானவரை விசாரித்தான். ''ஒரு மாதத்திற்கு முன்பு இராணுவத்தின் அட்டகாசம் கூடியதால் எமக்கும் இராணுவத்திற்குமிடையே கடும் போர் நடந்தது. அந்த நேரத்தில் மக்களின் பாதுகாப்புக்கருதி வேறு இடங்களிக்கு அவர்கள் போகும் படியாக வேண்டப்பட்டனர். ஆனால் எல்லோரும் எங்கே போனார்கள் என்பது தெரியாது'' என்றார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த துளசிக்குக் கவலையைவிடக் கண்களில் கோபக்கினி பறந்தது. தன் குடும்பத்தைச் சின்னாபின்னமாக்கிய இராணுவத்தைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. ஒருகாலத்தில் '' ஏன் இந்தப் போர்?'' ''ஏன் இந்த வீண் கொலைகள்?'' என்றெல்லாம் எண்ணியிருந்த துளசிக்கு, தமிழனுக்கு எப்படியெல்லாம் பாதிப்புகள் ஏற்படுகிறதென்று நன்றாகப் புரிந்தது. இதுவரை காலமும் சத்தியனுடன் குனித்த தலை நிமிராது கதைத்த அவள் விரத்தியுடனும் ஆவேசத்துடனும் தன்னை அனாதையாக விட்டுவிடாது தன்னையும் இந்தப் புனிதப்போரில் பங்குகொள்ளச் செய்யுமாறு பணிவுடன் கேட்டாள். சத்தியன் சற்றுயோசித்துவிட்டு அருகாமையிலிருந்த முகாமிற்கு அழைத்துச் சென்று அவர்களுடன் கதைத்துவிட்டு அங்கு அந்த இரண்டு பெண்போராளிகளுடன் துளசியையும் அனுப்பிவைத்தான்.

துளசி இருபெண் போராளிகளுடனும் சென்று அங்குள்ள பயிற்சிமுகாமில் சேர்க்கப்பட்டாள். குறுகிய காலத்தில் சகல பயிற்சியையும் மிகவும் திறமையையாகப் பயின்று பெண்களின் ஒரு அணிக்குக்த் தலைவியாகவும் தெரியப்பட்டுவிட்டாள். தன் ஆசைப்படி தலைவரின் அனுமதியுடன் தான் வசித்த கிராமத்தில் ஆக்கிரமிப்பு நடாத்திய இராணுவமுகாமைத் தகர்க்கும் பொறுப்பைப் பெற்றுக்



படிப்பகம்

www.padippakam.com





ஜி. உதயகுமார்

# பொண்ணு பிடிச்சிருக்கு

வேண்டா வெறுப்பாக பெண் பார்க்கப் போயிருந்தான் சிவா.

எத்தனை பெண் பார்த்தாயிற்று! இன்றோடு சேர்த்தால் இருபத்தி எட்டு! அவன் மனதில் இருந்த 'லட்சிய மனைவி'யின் எல்லையை எவரும் தொடவில்லை.

பேசாமல் 'டிமிக்கி' கொடுத்து விடலாமா என்று கூட நினைத்தான். ஆனாலும், தப்ப முடியாது என்பதால் போனான்.

"பெண்ணை கூட்டிட்டு வரச் சொல்லுங்க..."

"நம்ம ராஜியை காபி எடுத்துட்டு வரச் சொல்லு!"

காபி வாசனையை தொடர்ந்து, பெண் வந்தாள்.

நிமிர்ந்து பார்த்த சிவா, 28வது தடவையாக சுவாரஸ்யம் இழந்தான். நேரே பார்க்கிற மாதிரியும் இல்லாமல், நிலத்தைப் பார்க்கிற மாதிரியும் இல்லாமல் கண்கள். இதில் பல் வேறு தூக்கல். சித்தப்பாவை பார்க்கிறாளா? தன்னைப் பார்க்கிறாளா என்று குழம்பியபடி காபியை எடுத்துக் கொண்டான்.

"பொண்ணு பி.எஸ்ஸி முடிச்சிருக்கு..."

"எம்.எஸ்ஸியும் பண்ணட்டுமே... எனக்கென்ன?" என்று மனசுக்குள் முணுமுணுத்தான்.

"ஒரே பொண்ணு..."

"இன்னொண்ணு பெத்துக்கறதுதானே? நானா வேண்டாம்னேன்?" – மனசுக்குள்.

"பொண்ணுக்கு சோஷியல் ஒர்க்ல இன்ட்ரஸ்ட்!"

"அந்த லைன்லயே போக வேண்டியதுதானே? கல்யாணம் வேற எதுக்கு?" – மனசுக்குள்.

"அப்புறம் இந்த வீடு, அண்ணா நகர்ல ஒரு ஃப்ளாட், ஒரு வீடியோ கடை எல்லாம் இந்த பொண்ணு பேர்லதான். ஊர்ல இருக்கிற நிலத்தைக் கூட பொண்ணு பேர்ல எழுதிட்டார். வெளியே நிக்குதே கார்... பொண்ணு காலேஜ் போறதுக்குன்னே வாங்கின காராம்! என்ன... பொண்ணு பிடிச்சிருக்கா?"

"பிடிச்சிருக்கு" என்றான் சிவா!



படிப்பகம்

www.padippakam.com

# காலைக் காட்டு

## இந்தக் கதையை நள்ளிரவில் படிக்க வேண்டாம்...!



நடக்கப் போகும் விபரீதத்தை அறியாத கோகிலாவின் அம்மா, "டீ! ஏண்டி கால்ல வெந்நீரை கொட்டிக் கிட்டாப்புல பரபரக்கறே? பஸ்ஸுக் குதான் இன்னும் ஒரு மணி நேரம் இருக்கே..."

"உனக்கென்னம்மா? நீ சொல்லி ருவே. இந்த பஸ்தான் சாயங்காலம் அஞ்சு மணிக்கு போயிடும். இதை விட்டா, அடுத்த பஸ் ராத்திரி எட்டு மணிக்கு மேலதான் போய்ச் சேரும். நீ சேத்து விட்டியே... ஹாஸ்டலா அது? ஊருக்கு வெளியே இருக்கு. அந்த ஏரியாவுல பேய் நடமாடுதாம்! ராத்திரி ஏழு மணிக்கு மேல ஒரு ஈ, காக்கா வெளிய வரணுமே... தப்பித் தவறி யாராவது ஹாஸ்டலுக்கு இருட்டின பிறகு போனா, வாசல் கதவைத் திறக்காம, ஜன்னல் கதவைத் திறந்து, யார் லேட்டா வர்றாளோ, அவ பேரைச் சொல்லி, 'உன் காலை காட்டு பார்ப்போம்?' அப்படி, இப்ப டின்னு கழுத்தை அறுப்பாளுவ."

அம்மா இதைக் கேட்டதும் சிரிக்கிறாள்.

"சரியான பயந்தாங்கொள்ளி... பேய்க்கு கால் கிடையாதாமா?"

"ஆமா"

"சரிடி..புறப்படு."

பையை எடுத்துக் கொண்டு அம்மாவும் கூட வந்தாள். பஸ் புறப்படும் வரை புத்திமதிகள் சொல்லி விட்ட பெற்றாள்.

"டீ மீனா! என்னடி... ஏழு மணி ஆகுது. இன்னும் கோகிலாவைக் காணோம்? இன்னைக்கு வர்றேன் னுதானே சொன்னா உன்கிட்ட?" வார்டன் கேட்டார்.

"ஆமா மேடம்! நாளைக்கு அவள் வேலைக்கு போகணுமே!..."

**கோ**கிலா வந்த பஸ் பிரேக் டவுனாகி, ஆள் வந்து பார்த்து கிளம்பி, ஏழு மணிக்குதான் கோட்டையூர் வந்து சேர்ந்தது. கோகிலா 'திக் திக்' மனதுடன் ஹாஸ்டலை நெருங்கிக் கொண்டிருந்தாள்.

'டக்... டக்...'

"மேடம்! யாரோ கதவைத் தட்டறாங்க..."

"யார், கோகிலாவாத்தான் இருக் கும். கதவைத் திறங்க" என்றார் வார்டன் தன் ரூமில் இருந்தபடி

பெண்கள் எல்லோரும் ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டு, ஜன்னல் கதவைத் திறந்து, "ஏய் கோகி! காலைக் காட்டு... அப்பத்தான் கதவை திறப்போம்" என்றார்கள்.

"இதோ, காலு!" என்று வந்த உருவம், தன் கையிலிருந்த கோகிலாவின் காலை ஜன்னல் வழியாக ரத்தம் சொட்டச் சொட்ட காட்டியது.

சூர்யா



படிப்பகம்

www.padippakam.com

கொண்டாள். அந்த முகாமைத் தாக்குவதற்கு வேண்டிய உபாயங்களையும் தந்திரங்களையும் சேகரித்துத் தனது சகோதரியையும் தன்னையும் கொடுமைப் படுத்திய இராணுவத்தினரை நேருக்கு நேர் வீராங்கனையாகச் சந்திக்கப் போவதைப் பெருமையாக நினைத்துக் கொண்டாள். அவள் திட்டமிட்டபடி இருட்டோடு இருட்டாக அந்த முகாம் தகர்த்தெறியப்பட்டுக் கிழவன் உட்பட சகல இராணுவத்தினரும் கொல்லப்பட்டு அங்கு சிறையில் இருந்த கைதிகளும் விடுவிக்கப்பட்டனர். தன் சாகோதரியைப் பற்றி விசாரித்தாள். அதுபற்றிய தகவலை ஒருவரும் தெரிந்தவர்களாக இல்லை. அவர்களுள் ஒருவர் அந்தக் கட்டிடத்தில் இருக்கும் டாக்டர் இந்திராதேவியைக் கேட்டால் சிலவேளை இவ்விடயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியுமென்று கூறினார். ஆனால் அந்தக் கட்டடமும் தங்களால் தாக்கப்பட்டதனால் அதற்குள் இன்னமும் யாரும் இருப்பார்களா என்ற சந்தேகத்துடன் அவசரமாக அந்தக் கட்டடத்தினுள் ஓடிச்சென்றாள். அங்கே ஓர் உருவம் உடைபட்ட கட்டடத்திற்குள் அகப்பட்டுக் கிடந்தது. துளசியும் மற்றப்போராளிகளும் அந்த உருவத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள். ஆமாம் அதுதான் டாக்டர் இந்திராதேவி. துளசி டாக்டரைத் தனது மடியில் அமர்த்தித் தனது இடுப்பிலிருந்து தண்ணீரை அவர் முகத்தில் தெளித்து தான் பயிற்சி பெற்ற முதல் உதவியை முறைப்படி செய்து அவரைக் காப்பாற்றினாள். பின் தனது அக்காவைப் பற்றி விசாரிக்கலானாள். டாக்டருக்கு, தேவகி, மல்லிகா ஆகியோரின் ஞாபகம் வந்தது. சகல வரலாறுகளையும் ஒன்றும் விடாமல் கூறித் தன்னையும் எந்த இடத்திற்கும் விடாமல் இங்கு அடிமையாக்கிவிட்ட அந்தக் கிழவனைத் திட்டிக் கொண்டார். துளசி தன் சகோதரிக்கு ஒன்றும் ஏற்படாமல் காப்பாற்றிய தேவகிக்கும் டாக்டர் இந்திராதேவிக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அவரையும் அழைத்துக் கொண்டு தனது முகாமிற்குச் சென்றாள். அடுத்தநாள் காலையில் முன் கூட்டியே அறிவிக்கப்பட்டபடி அந்தக் கிராமத்து மக்கள் அனைவரும் புரட்சிவாதிகளினால் வழங்கப்படும் அடையாள அட்டையைப்

**சிகரெட்**



இவன் தீக்குளிப்பதை
சட்டம் தண்டிக்க முடியாமல் தவிக்கிறது!

ஆர். சக்திவேல்.



படிப்பகம்

www.padippakam.com

எமது

அடுத்த **சிந்துநதி** பதிப்பகம் வெளியீடுகள்...

R.R சங்கரின்...



# முள் மீது தூங்கும் ரோஜாக்கள்

(கவிதைத்தொகுப்பு)




# குயில் பாடும் தாலாட்டு

(புதிய ஈழத்துப் பாடல்கள்)

படிப்பகம்

பெறுவதற்குக் கூடினர். துளசியும் அங்கு துரிதமாக வேலைகளைக் கவனித்த வண்ணம் இருந்தாள். அங்கே ஒரு இளைஞன் ஒற்றைக் கையும் தாடியுமாக நின்று துளசியை உற்று உற்றுப் பார்த்தான். பின் துளசியருகில் சென்று ''நீ துளசி தானே?''. என்று கேட்டான். இயக்கத்தில் எல்லோரும் ''மது'' என்றே அழைப்பார்கள். திடீரென ஒருவர் ''துளசி'' என்றதும் அவள் அந்த உருவத்தை உற்று நோக்கினாள். அதற்கிடையில் கோபால் தன்னை அறிமுகப்படுத்தி மீனாட்சியம்மா பொட்டலத்தை எறிந்தது வரையிலும் சகல விபரங்களையும் கூறி முடித்தான். துளசி ''இப்போ எல்லோரும் எங்கே இருக்கின்றார்கள் என்று தெரியுமா?'' என்று விசாரித்தாள். ''ஆம் தெரியும் ஆனால் நான் அங்கு போவதில்லை'' என்று கூறினான். இதைக்கேட்ட துளசிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. உடனே உள்ளே சென்று ''வயலெஸ்'' மூலம் தனது மேலதிகாரியிடம் இரண்டு நாட்கள் லீவு பெற்றுக்கொண்டு கோபாலுடன் தாய், தந்தை, சகோதரி இருக்குமிடம் சென்றாள். ஆனால் அங்கு அவர்கள் இல்லை. அடுத்த வீட்டாரிடம் விசாரித்ததும் அவர்கள், ''அருகில் இருக்கும் கோவிலில் இன்று மல்லிகாவிற்குத் திருமணம்'' என்றார். துளசி இறைவனின் அருளைமெச்சினாள். ''உரியநேரத்தில் பிரிந்திருந்த எங்களைச் சேர்த்திருக்கிறான்'' என்று கோவிலை நோக்கிச் சென்றனர். அங்கே யாவரும் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆம்! அது திருமண ஆரவாரமல்ல. தன் சகோதரியையும் தகப்பனையும் ''ஏமாற்றுக்காரர்கள், ஒருவனது வாழ்க்கையைப் பாழாக்கப்பார்த்தார்கள்'' என்று திட்டிக்கொண்டிருப்பதை அவதானித்தாள். ஆவேசத்துடன் உள்ளே புகுந்து எல்லோரையும் அமைதியாக இருக்கும்படியும் தான் கூறுவதைக் கேட்கும் படியும் உருக்கமாகக் கூறினாள். பின் டாக்டர் இந்திராதேவி கூறிய விடயத்தைத் தெளிவுபடுத்தி, மல்லிகாவிற்கு ''எயிட்ஸ்'' என்னும் வருத்தம் இல்லை என்பதை நிரூபித்தாள்.



## பாரதி பாடியது சரிதான்.

சிங்களத் தீவினுக்கோர்
பாலம் அமைப்போம்...

பாரதி பாடியது சரிதான்.
அகதிகள் நடந்து வருவதற்கா?

எஸ். ரமணா அகஸ்டஸ்.

www.padippakam.com

# பொன்மொழிகள்.
பொன்மொழிகள்.
பொன்மொழிகள்.

பகைவனின் தண்டனையை விட, நண்பனின் துரோகம் மிகக் கொடியது.

**ஸைரஸ்** — **ஜே.பி. ராஜேந்திரன்.**

பணத்தை இழந்தால், கொஞ்சம்தான் நஷ்டம். நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்!

**அர்மீனியா** — **கே. விஜயலட்சுமி.**

உன்னிடம் உள்ள திறமையை – அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் உடனே பயன்படுத்தத் தயங்காதே.

**ஹென்றி வேன்** — **திருப்பூர் இஸ்மாயில்.**

பேசாமலே இருப்பவன் ஊமை; எப்போதும் பேசிக் கொண்டே இருப்பவன் வாயாடி; பேச வேண்டிய இடத்தில் மட்டுமே பேசுபவன் அறிவாளி.

**நிக்கல்சன்** — **ந. நவமணி.**

ஒரு அரசாங்கத்தை அமைக்க ஆயிரம் வருடம் கூட போதாது. ஆனால் அந்த அரசாங்கம் மண்ணோடு மண்ணாக – ஒரு மணி நேரம் போதும்.

**லார்டு பைரன்** — **உமா முரளி.**

தனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லி விடுபவன் தன்னையறியாதவன்.

**யாரோ** — **விஜய்.**

இருபது வருடங்கள் சிரம்ப்பட்டு ஒரு ஆணை ஒரு பெண் உருவாக்குகிறாள். இரண்டு வினாடிகளில் வேறொரு பெண் அவனை மாற்றி விடுகிறாள்!

**கதே** — **அயன்புரம் சிவாஜிபாபு.**

பணிவு என்பது நம்மைப் பற்றி நாமே சரியாக மதிப்பிட்டுக் கொள்வதுதான்.

**சி.எச். ஸ்பர்ஜன்** — **'சிக்' ரவிச்சந்திரன்.**

அறிவுக்கு முற்றுப்புள்ளி வைக்காதே. நீ சாகும் வரை உன் அறிவுக் கதவு திறந்தே இருக்கட்டும்.

**இராஜாஜி** — **எஸ். லாவண்யா.**

மற்றவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை விட, நீ உன்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்பதே உன் நிலையைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கிறது.

**செனிகா** — **எம். வினோஃபா.**


படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கதையைக் கூறிய அந்த உத்தியோகத்தர் துளசி முன் வந்து ''என்னை மன்னிக்கவும் இராணுவ அதிகாரி மட்டுமல்ல நானும் இதை நமபிவிட்டேன், இத்திருமணத்தைக் குழப்ப வேண்டும்,'' என்று நான் இதைக்கூறவில்லை. என் நண்பரின் மகளின் திருமணத்திற்கு வந்த நான் இப்பெண்ணைக் கண்டதும் என்னையும் அறியாமல் கூறிவிட்டேன். இவ்விடயத்தை இவளது தங்கை துளசி இறந்த செய்தியைத் தெரிவிக்கப் போனபோது இதைப்பற்றித் தகப்பனிடம் சொல்லத்தான் இருந்தேன். அவர்களது துன்பத்தை உணர்ந்த நான் இன்னொரு நாளைக்கு இதைப்பற்றிக் கூறுவோமென்றிருந்தேன். இதற்கிடையில் எல்லோருமே திசைதெரியாமல் போய்விட்டனர். நானும் வேலையை இராயினாமாச் செய்து விட்டேன்'' என்று முடித்தார்.

''துளசி இறக்கவில்லை, உயிருடன்தான் இருக்கிறாள்!'' என்றவாறு தாய்க்கு அருகில் சென்றாள் துளசி. எல்லோரும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். பின் சுருக்கமாகத் தனக்கு நடந்தவற்றைக் கூறினாள். மணவறைக்கு முன்னிருந்த ஐயர் ''முகூர்த்தம் நெருங்கிவிட்டதாகவும் மாப்பிள்ளையை வரும்படியும் அழைத்தார். இதுவரைகாலமும் தாய் தந்தையின் சொற்படி கேட்டுநடந்த மல்லிகா பூகம்பம் வெடித்தது போலக் கதறினாள். தனக்கு இந்தத் திருமணம் வேண்டாமெனக்கூறி மக்களுக்குள் மக்களாகப் பிச்சைக்காரனை ஒத்தாற்போலக் காட்சியளித்த கோபாலின் கையைப் பிடித்து மணவறைக்கு இழுத்து வந்தாள். எல்லோரும் வாயடைத்துப் போய் இருந்தனர். மீனாட்சியம்மாள் ஆவேசமாக ''மல்லிகா! போயும் போயும் நீ ஒரு வலது குறைந்தவனையா திருமணம் செய்யப்போகிறாய்? எமது வம்சம் என்ன என்று நன்றாகச் சிந்தித்துப்பார்''என்று கத்தினாள். மல்லிகா, கோபாலுக்கு எப்படிக் கையில்லாமல் போனது என்பதையும் தாங்கள் பட்டகஷ்டங்களுக்கு எப்படியெல்லாம் அவன் உதவினான் என்பதை சர்மாவும் சேர்ந்து எடுத்து விளக்கினர். இப்போதுதான் மீனாட்சியம்மாள் தங்களால்த்தான் கோபாலுக்குக் கை பறிபோனதென்றும் கோபாலுடன் தான் நடந்துகொண்டவிதம் எவ்வளவு தவறென்றும் உணர்ந்துகொண்டு கோபாலிடம் மன்னிப்புக் கோரியதுடன் அவனை மாப்பிள்ளையாக ஏற்றுக்கொண்டு திருமணம்

உலகின் மிக
பயங்கரமான போர், மனச்
சாட்சியோடு நடத்துவதுதான்.

மன்னை சுதாகர்.

ஒவ்வொருவனும் தன்னை அறிஞன்
என கருதிக் கொள்கிறான்.
அதனால்தான் உலகில் இத்தனை
முட்டாள்கள் இருக்கிறார்கள்.

ஹங்கேரிப் பழமொழி



படிப்பகம்

www.padippakam.com

செய்யும்படி வேண்ட, திருமணம் இனிதே நிறைவேறியது. அடுத்தநாள் துளசி புறப்பட்டாள். ஐயர் அவளைப் போகவிடாது தடுத்து ''நீயும் திருமணம் செய்து கொண்டால்த்தான் எங்களுக்கு நிம்மதி ஆகவே புரட்சிவாதிகளிடம் கூறிவிட்டு வந்துவிடு'' என்றார்.

துளசி சிரித்தபடி ''எனக்குத் திருமணமா? அது ஆகிவிட்டது'' என்றாள். எல்லோரும் விழித்தனர். ''ஆம் இதோ பாருங்கள் எனது தாலி'' என்று கழுத்தில் கட்டியிருந்த கறுப்புத்தாலியைக் காட்டினாள். அது வேறொன்றும் இல்லை தங்கள் இலட்சியம் நிறைவேறுமுன் இராணுவத்திடம் அகப்பட்டுக்கொண்டால் தங்களைத்தாங்களே அழிக்கும் ''சயனைட்'' எனப்படும் மருந்து என்றும் தன்னைத் தடுக்கவேண்டாமென்றும் பல புரட்சிக் கருத்துக்களையும் உணர்த்தி எமக்குச் சுதந்திரம் நிச்சயம் தேவை என்பதையும் அவர்களுக்கு உணர்த்தினாள். அவளது புரட்சிகரமான நியாயமான கோரிக்கையை எல்லோரும் ஏற்று மகிழ்வுடன் துளசியை வழியனுப்பினர். தமிழனின் பரிபூரண சுதந்திரம் விரைவில் கிடைக்கவேண்டும் என்று யாவரும் பிரார்த்தித்தனர்.

*** முற்றும் ***

## சாந்தி அடையட்டும்

என்
மனக்குழப்பத்தையும்
சோகத்தையும்
கண்ட
நண்பனொருவன்
சொன்னான்.
" உன் மனம்
சாந்தி அடையட்டும். "
என்று



என்
மனக்குழப்பத்திற்கும்
சோகத்திற்கும்
காரணமே
என்
மனம்
சாந்தியை
அடைந்தமைதான் என்று.
நண்பனுக்கு
புரியுமா?

சேகர்



படிப்பகம்

www.padippakam.com

# நம்பிக்கைப் பூக்கள்.

நம்பிக்கை என்பது ஒரு நாளிலே
உதிர்ந்து விடும் பூக்களாக இருந்து
விடக் கூடாது. மேலும் மேலும் மலரை
உருவாக்கும் செடியாக இருக்க
வேண்டும்.

காமேஷ்.

உயிர் பிரியும் நேரத்தை விட, உறவு
பிரியும் நேரம் மிகக் கொடுமையானது.

காமேஷ்.

பல தன்மைகள் வாய்த்த நண்பர்கள்
தொடர்பை விட, பொறுக்கி எடுக்கப்
பட்ட சில புத்தகங்களின் உறவு நமக்கு
அதிக நன்மையை அளிக்கும்.

கோல்டன்.

ஆரோக்கியமானவனிடம் நம்பிக்கை
உண்டு. நம்பிக்கை இருப்பவனிடம்
எல்லாம் உண்டு.

அரேபியப் பழமொழி.

நீங்கள் நீங்களாகவே இருங்கள்.
அப்போது தான் மற்றவர்களால்
உங்களை குற்றம் சொல்ல முடியாது.

ஜேம்ஸ் லியோ.

குருடர்களும் பார்க்கலாம்... ஊமைகளும்
பேசலாம்... செவிடர்களும் கேட்கலாம்!
அது என்ன தெரியுமா? அன்பு
ஒன்றுதான்!.

மார்க் ட்வைன்.



படிப்பகம்

www.padippakam.com


# திலீப்ரேடேர்ஸ்
# THELIB TRADERS

பசுமையான காய்கறிகளா?
இலங்கை, சிங்கப்பூர், தாய்லாந்து
ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட
கடலுணவுப் பொருட்களா?
வீடியோ, ஓடியோக் கசெற்றுகளா? C. D. களா?
எந்த மொழியில்? தமிழா? மலையாளமா? இந்தியா?
வாரமாத இதழ்களா? தினசரிப் பத்திரிகைகளா?
பலசரக்குப் பொருட்களா? மதவைபவங்களுக்குத்
தேவையான சகல பொருட்களுமா?
ஆண்கள், பெண்கள், குழந்தைகள்
அனைவருக்கும் தேவையான
நவீன ஆடைகளா? அணிகளா?
பட்டுவேஷ்டிகள், பட்டுப்புடவைகள், குர்தாக்களா?
எங்கிருந்து? இந்தியாவா? சிங்கப்பூரா?
தாய்லாந்தா? இந்தோனேஷியாவா?
சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்படும்
சுத்தமான 22 கரட் தங்கநகைகளா?
சிங்கப்பூர் தங்கநகைகளா?

**உங்கள் தேவை எதுவானாலும் அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்**

# THELIB
# TRADERS

TAUNUS STR. 17A, 6000 FRANKFURT 1.
TEL: 069/250361-2 - FAX: 069/234045


படிப்பகம்

www.padippakam.com

# பெருமை அடைகின்றேன்.




சோகமே உருவான ஈழமண்ணிலிருந்து அகதிகள் என்னும் முத்திரைகளை முகத்தில் ஒட்டிக்கொண்டு வெளியேறிய பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற போதிலும் அனைவருமே தமது தாய்மண்ணையும், தாய் மொழியையும் நினைத்துப்பார்க்கிறார்களா? என்பது கேள்விக்குறியே!

ஆனால் சிலர் இரட்டிப்பு மடங்காக எமது மண்விடுதலையைப்பற்றி சிந்திக்கிறார்கள், செயற்படுகிறார்கள். அத்தோடு நின்றுவிடாமல் மற்றவர்களையும் சிந்திக்க செயற்பட வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்தவகையில் இக்கதையின் படைப்பாளி கங்கணங்கட்டிக்கொண்டு முன்வந்திருக்கிறார் என்றால் மிகையாகாது.

இந்தக்கதை மூலம் இங்கு வாழும் எம்மினம் முழுசாக விழிப்பு அடையாவிட்டாலும், எமது பிரச்சனையைப்பற்றி கொஞ்சம் சிந்திக்கும் என நம்புகின்றேன்.

இக்கதையின் முடிவு இப்படியும் ஒரு பெண்ணா! என்று என்னை வியப்புக்குள்ளாக்கியது. என்னைப்பாதித்த இப்படைப்பாளியின் கதையை இன்று நூலுருவில் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

சேகர்
சிந்துநதி பதிப்பகம்

படிப்பகம்